விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 16 திங்கட்கிழமை (28.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 71




## தெற்கில் இருந்து தமிழ்மக்களை விரட்டினால் கடலில்பாய்வார்களா? அல்லது மண்டியிடுவார்களா?

### எரிக் சொல்ஹெய்மிடம் அஸ்கிரிய பீடாதிபதி கேள்வி

(கொழும்பு)

சிங்கள - முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் வடக்கிலிருந்து வெளியேற்றியதுபோன்று தெற்கிலிருந்து தமிழ்மக்களை நாம் விரட்டினால் அவர்கள் கடலில் பாய்வார்களா? அல்லது எம்மிடம் மண்டியிடுவார்களா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரர்.

நேற்றுக்காலை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று அஸ்கிரிய பீடாதிபதியுடன் பேச்சு நடத்தினார். சொல்ஹெய்மை தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ண மலர்தட்டுக்களை வழங்கி வரவேற்றார். தொடர்ந்து சொல்ஹெய்ம் பீடாதிபதியுடன் பேச்சுநடத்தினார்.

இச்சந்திப்பில் அஸ்கிரிய பீடாதிபதி கருத்துக்கூறுகையில்,

போர்நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. உடன்படிக்கை என்று பேச்சுவழக்கில்தான் உள்ளது. அதனை இருதரப்பும் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதாக எமக்குத் தெரியவில்லை. இதனை வைத்துதான் சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்கவேண்டும் என அனைத்துத் தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர்.

உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து மக்களை திருப்தியளிக்க வைக்க வேண்டும். இதற்கு நோர்வே அரசு தனது பூரண ஆதரவினை வழங்கவேண்டும்.

வடக்கிலிருந்து சிங்கள - முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டதைப்போன்று நாமும் அதனைச் செய்தால் தமிழ்மக்கள் கடலில் பாய்வார்களா? அல்லது எம்மிடம் மண்டியிடுவார்களா?

ஆனால் இந்நிலை தோன்றக்கூடாது. இனரீதியான பகைமையைக் கைவிட்டு ஐக்கியத்துடன் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இதுவே தனது எதிர்பார்ப்பு என்று தேரர் கூறியுள்ளார். (ச-4)

# ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. முரண்பாட்டினால் பொதுக்கட்டமைப்பு சாத்தியமில்லை

## புலித்தேவன் பேட்டி

(கொழும்பு)

நிவாரணப்பணிகளை கூட்டாக முன்னெடுக்க பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் ஆளும் கூட்டணி அரசின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கடும் முரண்பாடுகள் நிலவுகின்ற நிலையில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதென்பது சாத்தியப்படாத ஒன்றென தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான [illegible]

## இ.தொ.காவுடன் இன்று ஜனாதிபதி சந்திப்பு

(நமது நிருபர்)

அரசிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலகியுள்ள நிலையில் அக்கட்சி விலகியமைக்கான காரணங்களைக் கேட்டறிந்துகொள்வதற்காகவும், மீண்டும் அக்கட்சியை அரசில் இணைத்துக்கொள்வது குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இ.தொ.காவின் செயலாளர் நாயகம் [illegible]

# பொதுக்கட்டமைப்பு சாத்தியமில்லை

## புலித்தேவன் பேட்டி

(கொழும்பு)

நிவாரணப்பணிகளை கூட்டாக முன்னெடுக்க பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் ஆளும் கூட்டணி அரசின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கடும் முரண்பாடுகள் நிலவுகின்ற நிலையில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதென்பது சாத்தியப்படாத ஒன்றென தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.காவுடன் இன்று ஜனாதிபதி சந்திப்பு

(நமது நிருபர்)

அரசிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலகியுள்ள நிலையில் அக்கட்சி விலகியமைக்கான காரணங்களைக் கேட்டறிந்துகொள்வதற்காகவும், மீண்டும் அக்கட்சியை அரசில் இணைத்துக்கொள்வது குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இ.தொ.காவின் செயலாளர் நாயகம் ஆறுமுகம் தொண்டமானை இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

இ.தொ.காவுடன் இன்று முக்கிய சந்திப்பில் ஈடுபடவுள்ளதால் ஜே.வி.பியுடன் இன்று (12 ஆம் பக்கம் பார்க்க)


## மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு வயோதிபர் ஒருவர் மரணமானார். நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கரவண்டியில் சென்ற பிரஸ்தாப வயோதிபர் வீதித் திருப்பம் ஒன்றில் திரும்பமுற்பட்டவேளை வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியது.

இதனால் அவர் தலையில் படுகாயமடைந்தார். படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா (12 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் கல்முனைக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## கரவெட்டி இளைஞன் வவுணதீவில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவில் இராணுவ முன்னணிச் சோதனைச் சாவடியில் யாழ். இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் பயணம்செய்த மோட்டார் சைக்கிளுக்குள் கைத்துப்பாக்கி ரவை ஒன்று இருந்தமையாலேயே அவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டியைச் சேர்ந்த சத்தியசீலன் என்ற இளைஞனே கைதுசெய்யப்பட்டவராவார். விடுதலைப் புலிகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தினமும் சந்திகளில் கூடிநின்று

## மாணவிகளுக்கு தொல்லைகொடுக்கும் இளைஞர்களை கைதுசெய்ய உத்தரவு

(வவுனியா)

சந்திகளில் கூடிநின்று பெண்கள், பாடசாலை மாணவிகள் ஆகியோரைக் கேலி செய்தும், வீண்தொல்லைகொடுத்தும் வரும் இளைஞர்களுக்கு எதிரான தண்டனை சட்டக்கோவைக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா தலைமையகப் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

காரணமின்றித் தெருக்களில் கூடிநின்று இயல்புநிலைக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் சந்திகளில் இளைஞர்கள் கூடிநின்று செயற்படுவது தொடர்பாக நீதிமன்றுக்குப் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட நீதிபதி பொலிஸாருக்கு வழங்கியுள்ள உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையில் இளைஞர்களும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராகவே அரசுக்கு மக்களின் ஆணை கிடைத்தது

### ஜே.வி.பி. பிரதி அமைச்சர் சுனில்

விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபையை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினரும் சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் பிரதி அமைச்சர் சுனில்கந்தரெட்டி தெரிவித்துள்ளார்.

மகரகமவில் நேற்று நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 2004ம் ஆண்டு இடைக்கால நிர்வாகசபையை செயற்படுத்துவதற்கு எதிராகவே மக்கள் ஆணை கிடைத்தது.

ஜனாதிபதிக்கு 1999ம் ஆண்டுதான் மக்கள் ஆணை கிடைத்தது. ஜனாதிபதி என்பதனால் எதுவும் கூறலாம். ஜனாதிபதிக்கு இடைக்கால நிர்வாக சபையை இயங்கச் செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால் மக்கள ஜனாதிபதிக்கு வழங்கிய ஆணைவேறு.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 'சுனாமி' பேரலையால் நீண்ட காலத்திற்கு நாட்டில் போரலை ஏற்பட இடமில்லை

## -புதுடில்லியில் ஊடகவியலாளர் மாநாட்டில் லக்ஷ்மன் கதிர்காமர்

(புதுடில்லி)

இலங்கையும், இந்தியாவும் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் விரைவில் கைச்சாத்திடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இந்திய வெளிநாட்டு செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியளாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும், அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த உடன்படிக்கை தற்போது பூர்த்தியான நிலையில் உள்ளது. இனி அதனைக் கைச்சாத்திடுவதே மீதமாகவுள்ளது. இதில் கைச்சாத்திடுவது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டமைப்பு அரசுக்குப் பல்வேறு தடைகள் இருந்தன. அதனையெல்லாம் மீறி நாங்கள் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவோம்.

இதேவேளை, பாதுகாப்பு உடன்பாடு மாத்திரமன்றி இந்த உடன்படிக்கையில் இரு நாடுகளுக்கிடையில் மேலும் பல இணக்கப்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கத்துக்கு முன்னர் இருந்தது போல தற்போது அச்சுறுத்தல்கள் இல்லை. குறிப்பாக போர் அச்சுறுத்தல் இல்லை. ஏனெனில்,'சுனாமி' பேரனர்த்தம் போர் அம்சத்தில் இருந்து எம்மைக் காப்பாற்றியுள்ளது. இனிப் பல ஆண்டுகளுக்குப் போர் பற்றிய பேச்சு மககள் மத்தியில் கிடையாது. இதனை வைத்துப் பார்க்கும்போது எமக்கும் இவ் அச்சம் கிடையாது.

தற்போதுள்ள சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்குள் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அது வெறும் கருத்து வேறுபாடுகளே தவிர பிரிவினைக்கு இட்டுச் செல்லாது. அதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதும் இல்லை.

எமது அரசைப் பயன்படுத்தி கட்சியை முன்னேறறலாம் என்று எம்மோடு இணைந்த இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ் அது நிறைவேறாத கார ணத்தால் எம்மை விட்டுப் பிரிந்து சென்றுளளது. அதையிட்டு நாங்கள் கவலையடையப்போவதில்லை. அவர்கள் பிரிந்து சென்றாலும் நாங்கள் ஆட்சியில் இருக்கத் தான் போகிறோம். இவ்வாறான பூச்சாண்டி வேலைகளுக்கெல்லாம நாங்கள் ஆளாகப் போவதில்லை.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது அதற்கு நன்றியைத் தெரிவிப்பதில் நாம் கடமைப்பட்டுள்ளோம். இம் மனிதாபமான உதவியானது நீண்டகால செயற்றிட்டமாக ,அமைய வேண்டும்



என இந்தியா விரும்புகிறது.

எவ்வாறாயினும், தற்போதைய காலகட்டம் அரசியல் பேசுவதற்கான காலம் அல்ல. இதனை இரு நாடுகளும் புரிந்து வைத்திருக்கின்றன.

பதிலாக, சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனர்நிர்மாணம் செய்வதில் ஈடுபடுவதே இருநாடுகளினதும் நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்றுமுன்தினம் சந்தித்த லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா அளித்த உதவி குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடிதத்தை இந்தியப் பிரதமரிடம் கையளிததார். அத்துடன், காங்கிரஸ தலைவர் சோனியா காந்தியையும் அமைசசர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துக் கலந்துரையாடினார். (ற-4)

## யாழ். மாவட்டத்தில் சமூகத்தினரிடையே வாசிப்புப் பழக்கம் மிக அரிதாகியுள்ளது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்கின்ற பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சுமார் 59 பொது நூலகங்கள் இயங்கிவருகின்ற போதிலும் கூட, அவற்றினை உரியமுறைப் பிரகாரம் பயன்படுத்திப் பயனடைபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுவதாக உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய வட்டாரங்களில இருந்து அறியப்படுகின்றது.

இந்த நூலகங்களில் இருக்கக் கூடிய நூல்களில் பெரும்பான்மையானவற்றினை நூலக அங்கத்தவர்கள் பயன்படுத்தாமலேயே இருந்து வருகின்றதாகவும் தெரியவருகின்றது.

பொதுவாகவே, யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கமும், ஆர்வமும் வெகுவாகக் குறைநதுள்ளமையினாலேயே நூல்களை அவர்கள் நாடாமல் இருக்கின்றனர் எனவும், இயங்குகின்ற பொது நூலகங்களில் காணப்படும் தமிழக எழுத்தாளர்களின் நாவல்களையும், சிறுகதைகளையுமே இளம் பெண்கள் விரும்பி எடுத்து வாசித்து வருகின்றனர் எனவும் தெரிய வருகின்றது.

அத்தோடு இந்த நூலகங்களில காணப்படுகின்ற ஆங்கில மொழி நூல்களைப் பயன்படுத்துபவர்களின் எணணிக்கை மிக மிகக் குறைவானதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிலையில் பொதுமக்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சமுதாய ஆர்வலர்கள அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர். (ற-16)

## இராசி பலன்

28.02.2005
மாசி 16, திங்கட்கிழமை
சித்திரை பிற்பகல் 5.49 மணிவரை
சதுர்த்தி பிற்பகல் 12.50 மணிவரை
ராகுகாலம் 7.58 - 9.28 மணிவரை
சுபநேரம் 12.28 - 1.58 மணிவரை
சித்தாமிர்தம்
கரிநாள்

| | |
|---|---|
| மேடம் | நல்ல வரவேற்பு, தொழில் நன்மை, தேக ஆரோக்கியம், முயற்சி பலிதம். |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, உறவினர் உதவி, போசன நன்மை. |
| மிதுனம் | உடல் நலக்குறைவு, காரிய தாமதம், குடும்பக் கவலை, வியாபார நன்மை. |
| கடகம் | முயற்சி தாமதம், போசன சுகம், உடல் சோர்வு, உணர்ச்சிவசப்படல். |
| சிங்கம் | பிரயாண நன்மை, தொழில் விருத்தி, சகோதரர் உதவி, முயற்சி. |
| கன்னி | பெரியோர் ஆதரவு, காரிய தாமதம், அதிக வார்த்தை, பண விரயம். |
| துலாம் | தேக சௌக்கியம், நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | மனப்பதற்றம், உறவினர் மனஸ்தாபம், வேலைச்சுமை, காரிய அலைச்சல். |
| தனுசு | மனமகிழ்ச்சி, பிறருக்கு உதவுதல், காரிய அனுகூலம், தொழில் நன்மை. |
| மகரம் | அதிக பிரயாசை, தூரதேசச் செய்தி, நண்பர் உதவி, புதிய திருப்பம். |
| கும்பம் | மனச்சஞ்சலம், தொழிலில் ஆர்வம், பிரயாணம், ஆரோக்கியக் குறைவு. |
| மீனம் | காரிய தாமதம், எதிர்பாராத பிரச்சினை, வாகன பயம், பணத்தட்டுப்பாடு. |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

—வளவன்

## மேலும் 1500 பேருக்கு எழுதுவினைஞர் நியமனம்

(கொழும்பு)

அரசாங்கத்துறையில் எழுது வினைஞர் சேவையிலும் அதனோடிணைந்த சேவைகளிலும் 1500 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கபபடவுள்ளது. இதற்கான நியமனங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

கடந்த வருடம் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அடிப படையில் இந் நியமனங்கள் வழங்கப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்திருக்கிறது.

அமைச்சு அலுவலகத்தில் எதிர்வரும் 5,6ஆம் திகதிகளில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும்.

முனனர் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் அடிப்படையில் ஏற்கனவே 1640 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## 'சுனாமி' அனர்த்த நிவாரணம்; புலிகளின் மதிப்பீட்டு அறிக்கை ஆராயப்பட்டு வருகிறது

(கொழும்பு)

அரசாங்கம் - தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உலகவங்கி ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கான புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தையும், பங்குச் சந்தையையும் முன்கொண்டு செல்வதற்கான வழிவகைகள் என்ற தொனிப் பொருளில் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம மேலும் அங்கு தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை தற்போது ஆராயப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மனிதாபிமான உதவித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான கட்டமைப்புக் குறித்து எதிர்வரும் வாரங்களில் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியுமென அரசாங்க சமாதான நடவடிக்கை செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இது தொடர்பாக நடாத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தடைகள் தோன்றினாலும் இரு தரப்பினருக்கும் இவ்வாறான கட்டமைப்பு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான தேவையொன்று இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற-8)

## ரூ.46 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுகள் அழிக்கப்பட்டன

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தி வரப்பட்ட போது சுங்க அதிகாரிகளினால் கைப்பறறப்பட்ட 46 மில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் அழிக்கப்பட்டுள்ளன.

சுமார் ஆறுமாத காலப்பகுதியில் இந்த சிகரெட் வகைகள் வெளிநாடுக்ளிலிருந்து கட்டுநாயகக விமான நிலையம் ஊடாக நாட்டிற்குள் கொண்டுவர முறபட்ட வேளை சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட சுமார் 92 மில்லியன் கிகரெட்டுகளின் பெறுமதி 46 மிலலியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. (ற-8)

## தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள 67 தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறு விண்ணப்பம் கோரப்பட்டுளள தேசிய பாடசாலை அதிபர் வெற்றிடங்களில் 13 பாடசாலைகளின் அதிபர்கள் வெற்றிடங்கள் தமிழ்மொழி மூலமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்க முடியும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் நான்கு வார விசேட பயிற்சிக்கும் உட்படுத்தப்படுவர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், அதிபர் சேவையின் முதலாம் தர அதிபர்கள் போன்றோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## குற்றவாளிகளை சிறைச்சாலையில் வைத்து விசாரிக்க நடவடிக்கை ?

(கொழும்பு)

நீதிமன்ற வளவுகளுக்குள் குற்றச் செயலகளைத் தடுப்பதற்கு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நீதியமைச்சர் ஜோன செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற வளாகங்களில் தாக்குதல் நடத்தும் இவ்வாறான வன் செயல்கள் நாட்டின் நீதித்துறைக்கு களங்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குற்றவாளிகளை நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல் சிறைச்சாலைகளில் வைத்து விசாரிக்கும் நடைமுறை தொடர்பான யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுடன பேசசுக்களை நடத்தி வருவதாகவும நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குற்றச் செயல்களைத தடுக்கும் பொருட்டு சிரேஷ்ட சிறைசசாலை அதிகாரிகளுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் ஜோன் செனவிர்த்ன மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# பேச்சு வார்த்தைகள் தொடரவேண்டுமானால் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும்

## ஹெலஉறுமய நிபந்தனை

(கொழும்பு)

சமாதான பேச்சுக்களைத் தொடர வேண்டுமானால் விடுதலைப்புலிகள அமைப்பினர் சார்க் அமைதிப்படையினரிடம் தமது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய நிபந்தனை விதித்துள்ளது.

இந்தநிலையில், இடைக்கால நிர்வாகசபையின் யோசனைகளை மையப்படுத்தி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் தமது கட்சி நாடாளுமன்றத்தினுள் சில நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பு நாட்டின் ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவேண்டுமாயின் பேசசுக்கள் ஆரம்பிக்கும் முன் சார்க் நாடுகளின் இராணுவத்தினரான அமைதிப்படையிடம் விடுதலைப்புலிகள் தம்மிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைக்கவேண்டும் என்று கட்சியின் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அரசிற்கு சொந்தமான வளங்களை தனியார் மயப்படுத்துவது அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றியளிக்காது என்றும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அரசு சொத்துக்களை விற்பதன் மூலம் ஏற்பட்ட பின்னடைவுகளை எதிர்காலத்திற்கான முடிவுகளை எடுக்கும்போது கவனத்தில் எடுத்துக் கொளளவேண்டும் என ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய சொத்துக்களை விற்பதன மூலம் நாட்டின் பொருளாதாரம் தன்னிறைவு அடையும் என்று எதிர்பார்க்கமுடியாது.

உரிமைகள் தொடர்பாகவும் நாட்டிற்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் தொடர்பாகவும் ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் கட்சியின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# மத்திய போக்குவரத்துக்கான மானியத்தை திறைசேரி வழங்கும்

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள மத்திய போக்குவரத்து சபைக்கான மானியத்தை வழங்க திறைசேரி இணங்கியிருப்பதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

போக்குவரத்துச் சபைக்கு மாதாந்தம 100 மில்லியன் ரூபா மானியமாக வழங்கப்படவிருப்பதாக தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் இந்த நிதி இன்று முதல் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொத்தனி பஸ் கம்பனிகளில் கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும் நிர்வாகத்தை நடத்தவும் இந்த மானிய நிதி செலவிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

போக்குவரத்து சபைக்கு மானியம வழங்குவதை இரண்டு மாதங்களுக்கு முன்னர் திறைசேரி நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க-9)

# அழிக்கப்பட்டன

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் குப்பிளான், மல்லாகம், ஏழாலை போன்ற பிரதேசங்களில் மீட்கப்பட்ட 89 கண்ணி வெடிகளும 1 கைக்குண்டும் 1 மோட்டார் செல்லும் 1 ஆர்.பி.ஜி செல் ஒன்றும் குப்பிளானில் அமைந்துள்ள ஆயுத அழிப்பு குழியில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டன. (ப-106)

# சார்க்கின் புதிய செயலாளராக டோர்ஜி

(கொழும்பு)

சார்க் அமைப்பின் புதிய செயலாளர் நாயகமாக பூட்டான் நாட்டைச் சேர்ந்த டோர்ஜி பதவியேற்றுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில நடைபெற்ற வெளிநாட்டமைச்சர் மாநாட்டில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட இவர் தற்போது தனது பதவியைப் பெர்றுப்பேற்றுள்ளார்.

சார்க் அமைப்பின் 8ஆவது செயலாளர் நாயகமாகப் பதவியேற்றுள்ள 62 வயதான டோர்ஜி அடுத்த 3 வருடங்களுக்கும் இப் பதவியை வகிப்பார். (ந)

# சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## -கேணல் சூசை அறிவிப்பு



(மன்னார்)

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் வெடிபொருட்களைப் பயன்படுத்துவது உட்பட சட்டவிரோத மீன்பிடி என்பன குறித்து மன்னார் விடத்தல் தீவு அரசாங்கப் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முக்கிய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கலந்துகொண்டார்.

மன்னார் ஆயர் கிங்ஸ்லி அலாம பிள்ளை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட மீன்பிடி சங்கங்களின் முக்கிய பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகள் என சுமார் 300 பேர் வரை இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதன் மூலம் கடல் வளங்கள் அழிந்து போகும் அபாயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன், மீன்பிடித் தொழிலை வரைமுறைகளுக்கு அமைய மேற்கொளவதன் மூலம் கடலில் உள்ள இயற்கை வளங்களைப் பேணி பராமரிக்க வேண்டிய அவசியங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

சட்டவிரோதமாக மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, இதற்கென விடத்தல் தீவுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் காவல் நிலையம் ஒன்றும் செயற்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ந-4)

# ஐ.தே.க எம்.பிக்கள் அரசுடன் இணைவர்

## அமைச்சர் ஜெயரட்ண தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 17பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவதற்குத் தயாராகி வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும், துறைமுகங்கள் மற்றும் தொலைத் தொடர்புகள் துறை அமைச்சருமான டீ.என்.ஜெயரட்ண தெரிவித்துளளார்.

ஜே.வி.பி அரசைவிட்டு விலகாதென தான் நம்புவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியினர் தம்முடன் இணைவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு ஆண்டுகளுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி செய்யுமெனவும், சமாதானப் பேச்சுக்களின் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டுமென்ற யதார்த்தத்தினை ஜே.வி.பியினர் உணர்ந்துகொள்வார்களென தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# அமெரிக்க குழு இலங்கை வருகிறது

அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு வருகை தருகிறது. இத்தூதுக்குழுவிற்கு குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டெனஸீ இரண்டாவது மாவட்டத்திற்கான பிரதிநிதி ஜோன் ஜே.டன்கன் தலைமை தாங்குகிறார்.

இக்குழுவில் ஜெரி கொஸ் டெலோ, இல்லினொய்ஸ், சொலொமன் ஓர்டிஸ், டிம் ஷேல்டன், ஈ.பி.ஜோன்ஸன், றொன் லூவிஸ், ஜே.டி.ஷேவோத், லின்கன் டேவிஸ் ஆகிய பிரதிநிதிகள் உட்பட பல பிரதிநிதிகள் இதில் உள்ளடங்கியிருப்பர்.

இத்தூதுக்குழு தென்னிலங்கைக கரையோரமாக கடல்கோளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் பார்வையிடவுள்ளதுடன், அமெரிக்க அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்பட்ட திட்டங்களையும் அவதானிப்பர். தூதுக்குழு இலங்கை அரசு அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சமநிலையில் நிறைவுபெற்றது சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும், யாழ்.பரியோவான் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெற் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் கடந்த 25, 26ஆம் திகதிகளில் நடைபெற்ற இப்போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜெனன்றாச்சின் அதிரடி ஆட்டத்தினால் பத்திரிசிரியார் கல்லூரி அணி தனது மொத்த ஓட்ட எண்ணிக்கையாக 144ஐ எட்டியது. முதல் இனிங்சில் பத்திரிசியார் கல்லூரி அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனன்றாச் 62 ஓட்டங்களையும், ஜக்ஸன் 24 ஓட்டங்களையும், சுரேன் 19ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பரியோவான் கல்லூரி அணி சார்பில் நிருபரன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றினையும், கஜரூபன் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றினையும், சஞ்சீவன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இனிஸ்சை ஆடத் தொடங்கிய பரியோவான் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென சரியத் தொடங்கின. அதன்படி, அவ்வணி 105 ஓட்டங்களுக்குள் தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

இதில் சகிந்தன் 40 ஓட்டங்களையும், சஞ்சீவன் 12 ஓட்டங்களையும், கஜரூபன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் குறிப்பிடத்தக்க விடயம், இவர்கள் மூவரையும் தவிர வேறு எவரும் இரட்டை இலக்கத்தைத் தாண்டவில்லை.

பந்து வீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணி சார்பில் ஜக்ஸன் 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினையும், ஜீனத்றாச் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும், லூட்ஸன் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

39 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆடிய பத்திரிசியார் கல்லூரி அணி 8 விக்கெற்றினை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பில் அருண் 43, ஜதீஸ்வரின் 42, லூட்ஷன் 41, பதம முரளி 30 ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் அணி 228 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி அணி சார்பில் மயூரதன், கர்ஷாந்த், நிருபரன் ஆகியோர் தலா இரு விக்கெற்றினை வீழ்த்தினர்.

267 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்த பரியோவான் கல்லூரி அணி நேரம் முடிவடைந்ததால் 7 விக்கெற் இழப்புக்கு 202 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

துடுப்பாட்டத்தில் மயூரன் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும், மதன்ராஜ் 56 ஓட்டங்களையும், சஞ்சவன் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பத்திரிசியார் கல்லூரி அணி சார்பில் ஜக்ஸன், லூட்ஸன், ஆகியோர் தலா இரு விக்கெற்றினை வீழ்த்தினர். (ந-4)

# அரச ஊழியர்களுக்கான கடன்; இதுவரை 500 விண்ணப்பங்கள்

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு கடனாக வழங்கப்படவுள்ள 12 மாதங்களுக்கான சம்பளத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரை 500 பேர் விண்ணப்பித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் ஊடக ஆலோசகர் நிமல் கமகே தெரிவிக்கையில்,

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு 12 மாத சம்பளத்தொகையை வட்டியற்ற கடனாக வழங்க அமைச்சரவை தீர்மானித்திருந்தது. மேற்படி கடனைப பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அதன்படி, இதுவரை 500 விண்ணப்பங்கள் பொது நிர்வாக அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக இதுவரை விண்ணப்பிக்காத சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள், கிராம சேவகர்கள ஊடாக பிரதேச செயலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும். கடனைப் பெறுவதற்காக தெரிவுசெய்யப் படுபவர்கள் தொடர்பாக நாம் கடிதம் மூலம் அறிவிப்போம்.

கடன் விபரங்கள் தொடர்பான சுற்றுநிருபம் சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார். (ந)

# அதிபர்களின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான மேலும் ஒரு தொகுதி இலவச பாடநூல்கள் வந்துள்ளன.

எனவே சகல பாடசாலை அதிபர்களையும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோட்டக் கல்வி அலுவலர் சத்தியநாதன் அறிவித்துள்ளார். (க)

# மஹோற்சவம்

(கற்கோவளம்)

பருத்தித்துறை கோட்டிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற உள்ளது. (க-104)

# பொதுக் கட்டமைப்புக்கான இணக்கப்பாட்டை விரைவில் எதிர்பார்க்கலாமா?

இந்த வார ஆரம்பத்தில் ஜே.வி.பியின் செயலாளர் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தில் அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகள் உதவி புரிவதைத் தாம் வரவேற்றபதாக கூறினார். நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தையடுத்து நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என ஆங்கில இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியொன்றில் அவர் இக்கருத்தை வெளியிட்டிருந்தார்.

வட–கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளை விடுதலைப்புலிகள் முன்னெடுப்பதைத் தாங்கள் எதிர்ப்பதாகவும் இறைமையுள்ள நாடு என்ற வகையில் அனைத்துப் பகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் அனைத்தும் அரசாங்கத்தின் தலைமையிலேயே நடைபெற வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அரசாங்கத்திற்கு விடுதலைப்புலிகள் ஆதரவு வழங்கலாம். ஆனால், அவர்கள் தனித்துச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். நாட்டின் இறைமையை காப்பாற்ற தான் கடந்த மூன்று வருடங்களாக உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் ஏற்பட்ட இராணுவ சமநிலையின் அடிப்படையில் புலிகளை சமபங்காளியாக வைத்து உருவாக்கப்பட்டதைக் கவனிக்க அவர் தவறிவிட்டாரா? மாக்ஸிச சோசலிஸ வாதம் பேசி கண் மூடித்தனமாக ஆயிரக்கணக்கில் தம்மினத்தவரை கொன்று குவித்தவர்களின் தற்போதய இனவாத குதூகலிப்பில் யதார்த்தம் தெரியும் என எதிர்பார்ப்பது தவறுதான். ஆனலும் சுனாமி மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பை வரவேற்பதாக கூறியது சிலரிற்கு உற்சாகத்தையும் எதிர்பார்ப்பையும் கொடுத்தது.

இந்நிலையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை உருவாகி மூன்று ஆண்டு நிறைவையொட்டி அரசு தனது வழமையான பல்லவியில் நாட்டு மக்களையும் உலக சமூகத்தையும் ஏமாற்றும் வெற்று அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில் வழமை போல் இனவாதிகளிற்கு உரு ஏற்றும் சொற்பதங்கள், விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகள், சமாதான பேச்சுவார்த்தை என்பன இருந்தன. இனவாதிகளும் தமது பங்காளிக் கட்சியும் எப்படி இந்த அறிக்கையை எதிர்கொள்வார்கள் எனத் தெரிந்து அந்த சர்ச்சையை வேண்டித்தான் அறிக்கைவிடப்பட்டது. பாராளுமன்ற பெரும்பான்மையில்லாமல் பலகட்சி அங்கத்துவத்தில் ஊசலாடும் அரசாங்கத்தை வைத்துக் கொண்டு இடைக்கால நிர்வாகம் மட்டும் அல்ல நிரந்தர தீர்வுபற்றியும் பேசப்படவேண்டும் என்ற உப்புச்சப்பற்ற வாதத்தை வைத்த அரசாங்கம், தற்பொழுது புலிகள் அடங்கிய சுனாமி அனர்த்த புனர்நிர்மாண பொதுக் கட்டமைப்பையும் அரசியல் தீர்வையும் இணைத்துப் பேச முற்படுகிறது.

இந்த நடைமுறைக்கு ஒவ்வாத கருத்தை அரசாங்கம் பொதுக் கட்டமைப்பு சார்ந்த இணக்கப்பாட்டை புலிகளோடு எட்டுவதில் காலங்கடத்தும் நோக்கோடு ஒரு பரபரப்பை உருவாக்கி திசைதிருப்ப முன்வைக்கிறது. விடுதலைப் புலிகளோ ஆரம்பத்திலிருந்தே 'நாம அரசியலை முழுமையாக ஒதுக்கிவைத்து புனர்நிர்மாணப் பணிகளை அரசோடு சேர்ந்து முற்று முழுதாக முன்னெடுக்கத் தயார்' என அறிவித்துவிட்டனர். இருந்தும் இணக்கப்பாட்டிற்கு வராமல் குழப்பங்களை உருவாக்கி நிலைமையைச் சீர்குலைக்க அரசாங்கம் எத்தணிப்பது ஏன்? என்ற கேள்வி எல்லோரிடமும் எழுகிறது.

வரலாறு காணாத இயற்கை அழிவிலிருந்து நாட்டை மீளகட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் கூட முழுமை பெறவில்லை. பல்வேறு உலக நாடுகள், ஸ்தாபனங்கள் வழங்க முன்வந்திருக்கும் உதவிகளை எப்படி உரிய முறையில் பயன்படுத்துவது என்ற திட்ட அமுலாக்கல் விடயங்கள் பூர்த்தியாகவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பும் பொறுமையும் தினந்தோறும் குன்றிய வண்ணமே உள்ளது. மீள்கட்டுமானத்திற்கு உதவ முன்வந்த உலக சமுதாயம் அவல காலத்தில் அரசின் அநாகரிக ஜனநாயகத்திற்கும் அடிப்படை மனித விழுமியங்களுக்கும் கீழ்த்தரமான நகர்வுகளை ஆச்சரியத்தோடும் அதிர்ச்சியோடும் அவதானிக்கின்றனர்.

## சுனாமிக்கு முன்

யுத்தமும் நிரந்தர சமாதானமும் அற்ற அரசியல் வெறுமையில் இடைக்கால நிர்வாகமும் இன்றி தமிழ் மக்களை சீரழிந்த பொருளாதார நிலையில் காலங்கடத்தினால் புலிகள் வெகுஜன ரீதியில் ஓரங்கட்டப்பட்டு புலிகளை இராணுவ, அரசியல் ரீதியிலும் மேலும் பலமிழக்கச்செய்வதே அரசின் திட்டமாக இருந்தது. இராணுவ சமநிலையின் அடிப்படையால் உருவான யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சு என்ற போர்வையில் புலிகளை பலவீனப்படுத்தத் தேவையான காலத்தை நோக்காகக்கொண்டு அரசாங்கத்தினால் தந்திரமாக இழுத்தடிக்கப்பட்டு வந்தது. இந்த இழுத்தடிப்பு நாடகங்களிற்கு விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை ஒரு சுற்றுப் பேச்சில் கூட கலந்தாலோசிக்காமல் மாற்று யோசனை முன்வைக்கப்பட்டு அதன் அடிப்படையிலும்தான் பேச்சுகள் மீள ஆரம்பிக்கபடவேண்டும் என வாதிடப்பட்டது.

பேச்சுவார்தை நிகழ்ச்சி நிரல் தயாரிப்பில் கருத்து வேறுபாடு என்றும், அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் 'இதோ அதோ மீள ஆரம்பிக்கத் தயார' என்ற பாணியில் ஒரு அறிக்கைவிட அதன் பங்காளிக் கட்சியும் இனவாதிகளும் பேச்சு ஆரம்பித்தால் ஆட்சி கவிழும். மக்களை ஒன்று திரட்டிப் புரட்சி செய்வோம் எனக் கூக்குரலிட்டு அதட்ட அதற்கு அம்மையார் செல்லமாகக் கண்டித்து அறிக்கை விடுவார். இந்த மூன்று பகுதி தெருக்கூத்து அவ்வப்போது அனுசரணையாளர்களின் ஆதங்கத்தை திருப்திப்படுத்தவும் உலக நாடுகளை களிப்பூட்டவும் ஊடகங்களின் செய்திப்பசியைத் தீர்க்கவும் மீண்டும் மீண்டும் மேடையேற்றப்பட்டது. இந்த நிலையை தக்கவைப்பதில் அரசாங்கம் அரசியல் இராஜதந்திரரீதியில் வெற்றிகண்டாலும் வெளிநாட்டு நிதி உதவிகள் சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தோடு இணைக்கப்பட்டிருந்தால் பொருளாதாரரீதியில் நெருக்கடிகளை சந்தித்தது.

சில நேச நாடுகள் நிபந்தனையற்ற முறையில் சிறு தொகை கடன்களை வழங்கி நிலைமை எல்லைமீறிப்போகாது உதவி வந்தனர். தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு–கிழக்கு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் கடந்த மூன்றாண்டு யுத்த நிறுத்த காலப்பகுதியில் கணிசமான அளவு பொருளாதார மீட்சி பெற்றதோடு பெரும்பான்மை இனத்தவரின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு விரைவாகத் திரும்பியது யாவரும் அறிந்ததே. எனவே புலிகள் திட்டவட்டமான ஒரு காலகெடு விதிக்காத பட்சத்தில் அரசாங்கம் இந்த சமாதான பேச்சு மீளஆரம்பம் என்ற தெருக்கூத்தை தொடர்வதில் எந்த ஒரு இடையூறையும் எதிர்பார்க்கவில்லை.

## சுனாமிக்கு பின்

சுனாமி அனர்த்தத்தின் உடனடி மீட்பு மற்றும் நிவாரணச்செயற்றிட்டங்களில் புலிகள் காட்டிய அர்ப்பணிப்பையும் முதிர்ச்சியையும் தனியே அற்ப வளங்களோடு நிறைவேற்றிய பணிகளையும் உலகம் கவனிக்கத் தவறவில்லை. ஆரம்பத்தில் அரசாங்கம் வடக்கு–கிழக்கு பிரதேசங்களின் உண்மை நிலையை மறைத்து இழப்புகளை குறைத்துக் காட்டியது. மேலும் நாட்டின் தலைவியே போலிப் புள்ளிவிபரங்களை ஆதாரமாகக்காட்டி உலகை ஏமாற்ற முயன்றார். யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள நிலையில் உலக நாட்டு பிரதிநிதிகள், செய்தியாளர்கள் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் போக்குவரத்துக்களை அரசாங்கத்தினால் முற்று முழுதாக கட்டுப்படுத்த முடியாத நிலையில் வடக்கு–கிழக்கு பிரதேசங்களின் உண்மை நிலை வெளிவந்துவிட்டது. இந்நிலையில் மீள்கட்டுமான பணிகளிற்கு வழங்க இருக்கும் பல்நாட்டு உதவிகள் சேதங்கள் மற்றும் தேவைகள் அடிப்படையில் நாட்டின் அனைத் துப்பாகங்களிற்கும் சமமாக பங்கிடபட்டு புனர்நிர்மானிக்கவேண்டிய தார்மீக கடமை சர்வதேசத்திற்கு உள்ளது. அனர்த்தத்தின் ஆரம்பகாலத்தில் மீட்பு மற்றும் உடனடி நிவாரணங்களை வழங்குவதில் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிற் காட்டிய அப்பட்டமான இனவாத போக்கும் பெரும்பான்மையினர் பகுதியில் இடம்பெற்ற முறைகேடுகளும் அரசாங்கத்தின் நேர்மை விசுவாசம் நடுநிலைத்தன்மை மற்றும் ஆளுமையை கேள்விக்குறியாக்கிவிட்டது.

இதனால் கடந்த காலம் போல் உதவியின் பயன்பாட்டை அமுலாக்கலின் பின்னர் அளவிடமுடியா வண்ணம் உதவிப் பணத்தை கண்மூடித்தனமாக வழங்க உலகநாடுகள் தயாரில்லை. ஆகவே இவ்வுதவி கிடைக்குமாயின் வடக்கு–கிழக்கு பிரதேசங்களும் வரலாற்றில் முதன் முறையாக சம அளவில் புனர்நிர்மானிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும். ஊழல் இலஞ்ச முறைகேடுகள் அற்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்த சர்வதேச உதவிகளின் உச்சப்பயன்பாடு சாதாரண மக்களை சென்றடையும். மேலும் அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயக பிரதேசங்களும் புலிகளின் நிர்வாகத் தலமையில் புனர்நிர்மானிக்கபடுமானால் சிறந்த அமுலாக்கலையும் செயற்திட்டங்களையும் எதிர்பார்க்கலாம். இந்த புனர்நிர்மானம் நடந்தேறும் பட்சத்தில் இருபது ஆண்டுகளிற்குமேலான யுத்தத்தினால் சீரழிந்த பிரதேசங்களிற்கு ஒரு புத்துயிர் கிடைக்கும் என்பதில் அய்யம் இல்லை.

யுத்த நிறுத்த உடன்படிக்கைப் படி புலிகளிற்கு அரசியல் பணிகளை தமிழர் தாயக பிரதேசங்கள் எங்கும் தடையின்றி முன்னெடுக்கும் உரிமை உள்ள நிலையில் சுனாமி புனருத்தாரண நடவடிக்கைகளால் இப்பிரதேசம் பொருளாதார மீட்சிபெறும் போது அது சார்ந்த அரசியல் வெகுஜன செல்வாக்கை (தகுதியோடும் உரிமையோடும்) அறுவடைசெய்யும் நிலையிலும் உள்ளனர்! மேலும் நேர்தியான கட்டுப்பாடான திட்டமிடல் அமுலாக்கல் மூலம் புலிகள் தமது பல்துறை கட்டமைப்பின் ஆளுமையை வெளிப்படுத்தி சர்வதேச அங்கீகாரத்தை மேலும் அதிகரித்து கொள்ளுவர். இவையாவும் அரசிற்கும் தமிழ் தேசியத்தை எதிர்க்கும் அனைத்து சக்திகளின் எதிர்பார்ப்புகளிற்கும் எதிர்மாறானவை என்பது சொல்லித்தெரியவேண்டியதில்லை.

அதாவது சுனாமி அனர்த்தத்திற்கு முன்னர் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தின் கீழ் தமிழர் தாயக பிரதேசங்கள் புனரமைக்கப்பட்டால் புலிகளிற்கும் தமிழ் தேசியத்திற்கும் கிடைக்ககூடிய அரசியல் இராஜதந்திர அங்கீகாரத்திற்கு உடன்படாத சக்திகள் தற்பொழுது ஒரு புதிய நெருக்கடியை சர்வதேச சமுகத்திடம் எதிர்கொள்கின்றனர். யதார்த்தத்தை எதிர் கொண்டு அனர்த்த காலத்தின் தேவை நிமித்தம் அரசியல் இழுபறி அற்ற மீள்கட்டுமான பணிக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை விரைவில் உருவாக்குவது. எனவே தற்போதுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை விதி முறைகளோடு புலிகளின் தற்போதய அரசியல் இராணுவ இராஜ தந்திர முதன்மைத்துவ பின்னணியில் தமிழர் தாயக பிரதேசகளில் நியாயமான சுனாமி அனர்த்த புனர்நிர்மானப் பணிகளை அனுமதிக்கும் மனநிலையில் இச்சக்திகள் இல்லை.

புலிகளிற்கு உள்ள அங்கீகாரம் மற்றும் பன்முக முதன்மைத் தன்மையை சிதைத்து அல்லது கேள்விக்குரியதாக்கும் நகர்வுகளில் தான் தற்சமயம் இச்சக்திகள் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றனர், மீள்கட்டுமான பணிக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை விரைவில் உருவாக்குவதில் அல்ல! சுனாமி அனர்த்தத்திற் உதவி என்றரீதியில் நாடுகள் சில தமது உலக மேலாண்மைத்துவத்தை பிராந்தியத்தில் நிரூபித்து விட்டனர். பிராந்திய வல்லாதிக்க கனவில் இருந்தவர்கள் சொப்பனத்தில் இருந்து விழித்து தாமும் சளைத்தவர்கள் இல்லை என்று மீண்டும் காட்ட முனைகின்றனர். இவை பல கோணங்களில் முன்னெடுக்கபடுகிறது, அதில் ஒன்று இலங்கை அரசாங்கம் சர்வதேச சமுகத்திடம் எதிர்கொள் கின்ற நெருக்குதலை சாதகமாக பயன்படுத்தி இலங்கையில் தமது தலையீட்டு திறனை விரைவாக நிருபிப்பது. இந்த சதுரங்க ஆட்டத்தின் உச்சப்பயனை பெறுவோம் என தற்பொழுது கனவில் திளைத்துக்கொண்டு இருப்பவர்கள் தமிழ் தேசவிரோதிகளும் இனவாதிகளும் இலங்கை அரசாங்கமும்.

காந்தீய ஜனநாயக போர்வையில் ஒளிந்துள்ள மேலாண்மை வாதிகளின் தோல்விகண்ட வெளி

**இணையத்தளத்திலிருந்து...**

யுறவுக்கொள்கையின் வரட்டுத்தனத்தில் மாற்றம் வரலாம் என கடந்த சில வாரங்களாக அங்கலாய்த்தவர்களில் சில அறிவாளிகளும் அடங்குவர். ஆனால் இரு நாட்களிற்கு முன்னர் தமிழ் தேசவிரோத கைக்கூலிகள் இருவரின் விசேட பேட்டி என்ற தலைப்பில் கேள்வியையும் பதிலையும் தாமே தயாரித்து தமது இரு வேறு பிரச்சார ஊடகங்களில் பிரசுரித்து வரட்டுத்தனம் தொடரும் என்பதை உறுதி செய்துள்ளனர்.

இவ்வனைத்துச் சக்திகளும் இன்று இலங்கையில் ஒன்றுசேர்ந்து ஒன்றை மட்டும் உருவாக்குவதிலும் பேணுவதிலும் ஒத்துளைக் கிறார்கள், மீள்கட்டுமான பணிக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை விரைவில் உருவாக்க முடி யாத ஸ்திரமற்ற அரசியல் நிலமையையும் திசை திருப்பும் காலங்கடத்தும் நகர்வுகளும். □

## வருமுன் அணை

சீறிய அலையால் சிதைந்தது கிராமம்
இனியும் வருமா சுனாமி?
சுனாமி வருமுன் அணை
அதையும் செய்யும் சின்னக் கரங்கள்.

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

## எதிர்கால இலங்கை

எங்கள் நாட்டின் பிரதிநிதிகளே!
உங்கள் கறுப்புக் கண்ணாடிக்கப்பால் பாரீர்!
நீங்கள் முழங்கும் எதிர்கால இலங்கையர்கள்
தாங்கள் தொலைத்த நிகழ்காலத்தினை
அவர்கள் வீதியில் தேடிக்கொண்டிருப்பதை...


காற்றன்
இராமாவில்.

## மலர்வு

துள்ளித்திரியும் காலமிது –நாம்
எம் உடலை வருத்துகின்றோம்
ஏழை எம் வாழ்வு மலரவல்ல
தொழில் கொள்வோரின்
வாழ்க்கைத்தரம் உயர்வடைய!
மனிதா! சட்டங்கள் பல உன்னருகில்
அவற்றிற்கு நீ உயிர்கொடு
நாளைய தலைவர் நாம்
நாட்டை கட்டியெழுப்ப...

ப.சுதாஸ்,
கொம்மந்தறை.

# மௌனத்தின்



## காலங்கள் பதில் சொல்லும்!

தலை மீது கல் சுமந்து
துள்ளித் திரியுமிந்த
துடுப்புமிக்க பருவமதில்
துயர்கலந்த முகத்துடனே
துணையின்றி தவிக்கின்றீர்
கண்மணிகள் உங்களுக்கு
கடுகதியில் விடிவிருக்கும்
கலங்காமல் இருந்திடுவீர்
காலங்கள் பதில் சொல்லும்!

திருமதி.P.S.ராணி,
சங்கானை.

# தேடல்கள் – 48

## யார் இட்ட கட்டளை?

பால்முகம் மாறாத
பச்சிளம் குழந்தைகளே!
துள்ளித்திரிந்து பல
நண்பர் கூட்டத்துடன்
பள்ளியிலே பல கலைகள்
கற்கவேண்டிய நீங்களும்
இன்று பொறுமையுடன்
துரிதமாய் செயற்படுவது
ஏன்?
இது யார் இட்ட கட்டளை?
இயற்கைச் சீற்றத்தின்
கட்டளையா?
அல்லது சின்னமா?

செல்வி.க.தர்மலிங்கம்.
யாழ்.தேசிய கல்வியியற்
கல்லூரி.

## எதற்காய் அத்திவாரம்...?

எதிர்கால அத்திவாரங்களே! - உங்கள்
எதிர்காலத்திற்கா இவ் அத்திவாரம்?
நம்பிக்கை வேரின் பிடிப்பிலே
நம்பிக்கையுடன் எழும் இவ் அத்திவாரம்
ஆழி அலையில் அள்ளுண்டு போகாது
ஆயிரம் ஆண்டுகள் நிலையாய் நிற்கட்டும்!

திருமதி.சி.கிரிதரன்,
கொக்குவில்.

## குழந்தைத் தொழிலாளர்!

உழைப்பதற்கு உறவுகளுமில்லை
குடும்பத்தைக் காக்க வழியுமில்லை
கட்டாயக் கல்வியை வெறும் கோசமாக்கிய
குழந்தைத் தொழிலாளர்.

இ.நவகேதீஸ்வரன்,
சுன்னாகம்.

# மௌனத்தின் தேடல்கள் - 50



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வு
களை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்**
வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.
**கிடைக்கவேண்டிய இறுதித் திகதி** - 07.03.2005
அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 50
**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.




## தாயன்பு

கருவறையில் தோன்றும் அன்பு
கண்களில் தோன்றும் பண்பு
சுவாசத்தில் தோன்றும் அன்பு
பாசத்தில் ஏங்கும் நெஞ்சு
தாலாட்டில் தவழ்ந்துவரும்
மொழி அன்பு
தாய்ப் பாலில் கலந்துவரும்
தாயன்பு!



சி.கிருசாந்தினி, கந்தர்மடம்.

## சுனாமி

எந்தச் செம்மனச் செல்வியின்
வேண்டுதலில் கடலே நீ
பெருக்கெடுத்தாய்??
அணை கட்ட ஒரு சிவனும்
ஏன்தான் வரவில்லை - முதல்
பட்ட அடி பரவி எல்லார்
முதுகும் வலித்ததனால்
கெட்ட சிவனும் மறந்து விட்டாரோ!
கடலே.....
இது தெரிந்துமா நீ
பெருக்கெடுத்தாய்??
'சுனாமி' அல்ல இது
சுவாமி கூட கண்டு அறியாத ஒன்று.

ஜெ.சுபா, நல்லூர்.

## காலம் எழுதிய வரிகள்

கறுப்பு கட்டிய விதவை
சலவை செய்யப்பட்டு
கற்பனைக்குள் சிக்காமல்
காட்சியளித்தாள்

சவப்பெட்டி காணாத
மரண ஓலத்துடன்
வரையப்படாத ஓவியங்களாய்
பிணக்குவியல்கள்

சோகமாய் இருண்டது
வானம் மட்டுமல்ல
மனங்களும்தான்

காணாமல் போன
நம்பிக்கைத் துளிகளுடன்
மனித. நேயத்தினர்
இருபபோரைக் காக்க
இதயமுள்ள கூட்டம்
தக்க சமயத்தில்
தலைகாட்டிக் கொண்டனர்

எங்களுக்கு நாங்களே
நீருற்றுவோம்
எழுந்து நடப்போம்

ஒளி தேடும் வாழ்க்கைக்கு
வானம் விடிகின்றது
கடல் அன்னை
காலம் எழுதிய வரிகளை
காண முயற்சிக்கின்றாள
பூமியும் கடலும்
மன்னிப்புக் கேட்கின்றது
மனங்களில் பூ, வகை.

ஜோ.ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

## நிம்மதி தேவதையே வா!

வாழ வழி தெரியாதான் வாழ்க்கை தான்
வலிய விதியின் வசம்
வாழ வழி தெரிந்துவிட்டால்
விதிகூட எமது வசம்!

வாழுகின்ற மனிதர்கூட்டம்
வாழ்நாள் முழுவதும் தேடுவதும்
வாழ்ந்து முடித்தபின் தேடுவதும்
எதனை...? எதனை...?
என்னுள்ளே பல வினாக்குறிகள்
எழுந்தெழுந்து விழுந்தன, காற்றுள்ள பந்தாய்!

பாராளும் சீமான் தொடக்கம்
பரதேசி வரை
படித்த பண்டிதன் தொடக்கம்
பாமரன் வரை! இன்னும்....
என்னுள்ளே பல வினாக்குறிகள்
எழுந்தெழுந்து விழுந்தன காற்றுள்ள பந்தாய்!

இப்பூவுலகம் தாங்கும்
அனைத்து ஜீவராசிகளையும்
அலசிப் பார்த்தேன
அங்கேயோர் பொதுமை கண்டேன்!
ஓரறிவு தொட்டு ஐந்தறிவு ஜீவன்கள் வரை
என்றுமிங்கே நிம்மதியாய் வாழ
ஆறறிவு படைத்த மனிதன் மட்டும்
ஆண்டாண்டாய்.....
அதைத் தேடியலைகின்றான்!
ஆனாலும் அவனால்
அதனை நிலையாகக் கைப்பற்ற
முடியவில்லையே!
அதன் காரணம் தானென்ன?
ஆசை... ஆசை... பொல்லாப் பேராசை!

அகியோபி, வதிரி.

## பிளாஸ்ரிக் பெண்ணே!

முன்பெல்லாம்
நல் மல்லிகை சூடிவரும் – நீ
இப்போதெல்லாம்
'பிளாஸ்ரிக்' மலர் சூடி
வருகின்றாய்!
முன்னர் நீ
எனைச் சந்திக்க வருமுன
இறைவனை சந்திப்பது
உன்நுதல் மங்கல
சந்தனம் சொல்லும்
இப்போ
அபாயச் சிவப்பொட்டி வருகிறாய்!
'ஐஸ்சொக்'கை
விரும்பியுண்ணும் உனக்கு
இப்போ
'பிளாஸ்ரிக் கப்' ஐஸ்கிறீம்
பிடிக்கிறது!
நானுன் வீடுவந்தால்
மரக்கதிரைச் செற்றியை
கஸ்ரப்பட்டு காவிவந்து
வேலியோர வேம்படியில்
வெட்கமாய்ப் போடுவாய்
இப்போ
'பிளாஸ்ரிக்' கதிரையை
'கச்' பண்ணென்று
தூக்கி வீசுகிறாய்!
போகிற போக்கில்
உன் இதயமும்
'பிளாஸ்ரிக்'காய் போகுமோ!
என் காதலிற்கு
எப்படி உயிர்கொடுப்பேன்.



சுமன்.

# போர், இயற்கை அழிவு ஆகிய இரண்டும் தமிழ் மக்களையே அதிகம் பாதித்துள்ளது

## தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கூட்டாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்தம், இயற்கை அனர்த்தம் இந்த இரண்டுக்குமிடையில் நசிந்து போன மக்களில் பெருமளவானோர் தமிழ் பேசும் மக்களே. உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள், அகதிமுகாம் வாழ்க்கை என்ற அவல வாழ்க்கை தமிழ் பேசும் மக்களுக்கே தொடர்ந்தும் ஏற்படுகின்றது. இவ்வாறு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், அரச ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியின் போது சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள்.**

கிழக்கு மாகாணப் பல்கலைக் கழக சிரேஷட பொருளியல்துறை விரிவுரையாளர் ஜனாப் முஸ்தபா இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

கொடூரமான யுத்தத்தினால் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு சுனாமிப் பேரலை ஏற்படுத்திய தாக்கம் "விழுந்தவனை மாடேறி மிதித்த கதை" போல் ஆகிவிட்டது.

20 வருடங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு விரக்தியடைந்த மக்களுக்கு, 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை பெரும் ஆறுதலையும் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

அரச பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் ஒரே மேசையில் அமர்ந்து பேசியது அவர்களுக்கு மேலும் நம்பிக்கையை வளர்த்தது.

ஆனால் தமிழ்பேசும் மக்களின இந்த நம்பிக்கையைக் களைய சில அரசியல் கட்சிகளும் வல்லரசு நாடுகளும் சதித்திட்டம் தீட்டின.

அதன் விளைவாக அமைச்சுக்கள் பறிப்பு, ஆட்சிக் கலைப்பு, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவு போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன.

இதன் பின்னர் தான் வன்முறைகள் கூடுதலாக இடம்பெறத் தொடங்கின.

இதேவேளை, புதிதாக ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பதைக் கைவிடாதமை தமிழ்மக்களுக்கு சற்று மன அமைதியை ஏற்படுத்தியது.

இந் நிலையில் தான் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமிப்பேரலை ஏற்பட்டது.

சுனாமிப் பேரலை தமிழ்பேசும் மக்களை மட்டுமன்றி சிங்கள இனத்தவரையும் தான் பாதித்தது. ஆனால தமிழ் பேசும் மக்கள் ஏற்கனவே போரினால மிக மோசமாகப் பாதிக்கப்பட்டமையினால் இந்தப் பாதிப்பு அவர்களை நிலைதடுமாற வைத்தது என்றார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின பீடாதிபதி ஏ.என்.அகமட் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமிப் பேரலையால் பாதிக்கபட்ட மககள் தமது இருப்பிடங்களை இழந்தும் உடமைகளையும் உறவுகளையும் இழந்தும் நலன்புரி முகாம்களில் வாழ்கின்றனர்.

இவர்கள் நலன்புரி முகாம்களில தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டால் சுகாதாரச் சீர்கேடு, தொற்றுநோய் பரவும அபாயமும் ஏற்படும். எனவே அவர்களுக்கு தற்காலிக குடியிருப்புக்களையாவது வழங்க அரசு உடன நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை சில பிரதேசங்களில தற்காலிகமாக அமைக்கப்பட்டு வரும சில குடியிருப்புக்கள் மிக சிறிதாக அமைக்கப்பட்டிருக்கின்றதாகக் கூறப்படுகின்றது.

ஒரு குடும்பத்தில் கூடுதலான அங்கத்தவர்கள் இருக்கின்ற போது இத்தகைய சிறிய குடியிருப்புக்களில அவர்கள் தங்கி வாழ முடியாதுள்ளது.

எனவே அங்கத்தவர்களின் தொகைக்கு ஏற்ப வீடுகளை விசால மாக அமைக்க வேண்டும்.

இதற்கிடையில் தற்காலிகமாக அமைக்கப்படும் குடியிருப்புக்களில் தான் மக்கள் தொடர்ந்தும் வாழ வேண்டிய நிலை ஏற்படுமோ என்ற அச்சம் தற்போது அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஏனெனின் அந்த அளவுக்கு அரசின் நிரந்தர வீடமைப்புத்திட்டச் செயற்பாடு மந்த கதியில் நடைபெறுகின்றது என்றார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், சிரேஷ்ட மாணவ ஆலோசகருமான ரமீஸ் அப்துல்லா கருத்துத் தெரி விக்கையில்,

சுனாமிப் பேரலை தமிழ் பேசும் மக்களின் கல்விக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. போரினால பாடசாலைகள், தளபாடங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என்பவற்றை இழந்த அதேநேரம்,

சுனாமிப் பேரலையும் இதே வகையிலான இழப்பையே ஏற்படுத்தியுள்ளது. சுனாமிப் பேரலையால் கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பாடசாலைகள் முற்றாகவே அழிந்துள்ளன.

மாணவர்கள் உறவுகளை இழந்த சோகத்தில் உள ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர்.

மாணவர்கள் தமது கல்வியைத தொடர முடியாத நிலையில் அவர்களது குடும்பங்கள் வறுமையில் இருக்கின்றன.

தொழில்களை இழந்த நிலையில் பொது அமைப்புக்களினதும் அரசினதும் நிவாரணங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவர்களின குடும்பங்கள் தமது பிள்ளைகளை எவ்வாறு படிப்பிப்பது? யார் அதற்கு உதவுவார்கள்? என ஏங்குகின்றன.

அரசாங்கமோ பாதிப்புற்ற மாணவர்களுக்கு உதவுவதாகத் தெரியவில்லை.

இது ஒருபுறமிருக்க எமது மக்கள அரசாங்கத்திடம் இரண்டு முக்கிய வேண்டுகோளை விடுக்கின்றனர்.

★வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நாம் பாதுகாப்புடன் வாழ உரிமை வேண்டும்.

★சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற நாம் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அரசு உதவ வேண்டும்.

என்பனவே இந்த இரு வேண்டுகோளுமாகும்.

இதேசமயம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கத்தினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சரியாகத் தான் கடைப்பிடிக்கின்றார்கள் அதில் எதுவித சந்தேகமுமில்லை.

ஆனால் இருதரப்பிலிருந்தும் சமாதான விரோதிகள் சிலர் இருக்கின்றமையினால் ஆங்காங்கே வன்முறைகளாக உருவெடுத்து ஒப்பந்தத்தை உடைக்கும் முயற்சிகள் அதிகரிக்கின்றன.

நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் யுத்தத்தின் விளைவுகளை மூவின மக்களும் தான் அனுபவிக்க வேண்டும்.

ஏற்கனவே யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் எமது நாடு அழிந்துவிட்டது. விளக்கமாகக கூறப்போனால் குற்றுயிரோடு எமது நாடு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

யுத்தம்,இயற்கை அழிவு என்ற இரண்டுக்கும் இடையில் நசியுண்டு போயுள்ள எமது நாட்டு மக்கள் மீண்டும் புத்துயிர் பெற வேண்டுமாயின் நாட்டில் தர்மம், நீதி, அமைதி உருவாக வேண்டும்.

நசியுண்ட மக்களுக்கு உதவிக் கரம் நீட்டி அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப உதவ வேண்டும்.

அத்துடன் எதிர்காலத்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின்போது மூவின சமூகத்தைச் சார்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போது மூவின சமூகத்தவர்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் தீர்வு அமைய வேண்டும் என்றார். (க-60)

### ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில்

## வேலை நீக்கம் செய்யப்பட்ட 27 பேருக்கு மீண்டும் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட ஊழியர்கள் 27 பேருக்கான நியமனங்கள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஜனாதிபதி மறறும் தினேஷ் குணவர்த்தன ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முனனைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டம் உட்பட நாட்டின் சகல மாவட்டங்களிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் நிலவிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகுதியான இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அதன் பிரகாரம் நியமனங்களையும் வழங்கியது.

ஆனால் பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு அந் நியமனம் முறைகேடானது எனக் கருதி இதனை இரத்துச் செய்திருந்தது. (க-9)

## பஸ் கட்டண முரண்பாடுகளை நீக்குவதற்கு துரித நடவடிக்கை

(கொழும்பு)

பஸ் கட்டணங்களிலுள்ள முரண்பாடுகள் விரைவில் நீக்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிரதான சாலைகளில் நிலவும் பஸ் கட்டண முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும்4 ஆவது கட்ட நடவடிக்கை எதிர்வரும் முதலாம் திகதி அமுலுக்கு வரவுள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழுத் தலைவர் சுமல் குமாரகே தகவல் தெரிவிக்கையில், பஸ்கட்டணம் தொடர்பான திருத்தங்களில், சில பாதைகளில் பஸ் கட்டணம் சிறிதளவு அதிகரிக்கப்படும். அதேவேளை சில பாதைகளில் குறைக்கப்படவும் உள்ளது.

இந்நடைமுறை மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவைக்கும் தனியார் பஸ் சேவைக்கும் பொருத்தமானது.

புதிய முறையில் கட்டணங்கள் கிலோ மீற்றரை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும். இச் சீர்திருத்தங்கள் சிறந்த பஸ்சேவையை நடாத்த வழிவகுக்குமென ஆணைக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

புதிய நடைமுறைகளை மீறும் பஸ் நடாத்துனருக்கு எதிராக ஆணைக்குழு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட பஸ் கடடணங்கள் சகல பஸ்களிலும் பிரயாணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். (க-7)

## திறப்பு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியொனறு இன்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

வாகரைப் பிரதேச மக்களின் குறிப்பாக, சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்ற மக்களின் சுய பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டே இவ் வங்கி திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்றுகாலை 10.00 மணிக்கு திருமலை வீதி, வாகரையில் அமையப்பெற்றுள்ள இவ் வங்கி திறந்து வைக்கப்படவுள்ளது. (ற)

## சிறுவர்களுக்கான வீதியுலா நிகழ்வு

(வட்டுக்கோட்டை)

சக்தி எவ்.எம். - சிரச மொபைல் விஷன் ஆகியன யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் சிறுவர்களுக்கான வீதியுலா நிகழ்வை நடத்தி வருகின்றது.

பாதிப்புற்ற சிறுவர்களின் உள நிலையை மாற்றி மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கிலேயே இந்நிகழ்வு நடாத்தப்படுகின்றது.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில வடமராட்சியில் இந் நிகழ்வு நடாத்தப்படுகின்றது.

இதேவேளை, குறிப்பிட்ட நிறுவனங்கள் நடாத்திய பல போட்டி நிகழ்வுகள் அகலத்திரையில் சிறுவர்களுக்கு காண்பிக்கப்படுகின்றன. போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. (க-39)

## தத்தமது உரிமைகளை வென்றெடுக்க மாகாண முதலமைச்சர்கள் தீர்மானம்

(கொழும்பு)

நடைமுறையிலுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின்படி தங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதறகு மாகாண முதலமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

மத்திய அரசாங்கத்தினால் திணிககப்படும் சங்கங்களை முதலமைச்சா கூட்டாக எதிர்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரததினபுரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 13வது முதலமைச்சர்களின் மாநாட்டிலேயே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசிலிருந்து மாகாண சபைகளுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளுக்கு மத்திய அரசாங்கத்தின மூலம் அல்லது அதன் அமைச்சர்கள் மூலம் நிதிகளை வழங்க வேண்டுமென்றும் அபிவிருத்தித்திட்டங்களை அமுல் செய்வதற்கு மாகாண சபைகளுக்கு நேரடியாக வெளிநாட்டு நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்குமான யோசனையும் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிதிகளை தேசிய நிதி ஆணைக்குழு மூலம் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தையும் முதலமைச்சா இம் மாநாட்டில் சுட்டிக் காட்டினார். (ற-8)

## சுனாமியை காரணமாக வைத்து அரசியல் இலாபம் பெறவேண்டாம்

## பிரதமர் மஹிந்த கோரிக்கை

(கொழும்பு)



சுனாமி அனர்த்தத்தைக் காரணமாக வைத்து அரசியல் நோக்கங்களை எவரும் நிறைவேற்றக்கூடாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசியல் கட்சிகளிடம் கேட்டுள்ளார்.

அவ்வாறு எவராவது அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முற்பட்டால மக்கள் அதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் பிரதமர் மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்த பின்னரும் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் தற்காலிக இடங்களில் தங்கியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,

அவர்களுக்கு நிரந்தர குடியிருப்புக்களை கட்டிக்கொடுக்கும் வரை தற்காலிக குடியிருப்புக்களையாவது வழங்குவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடமைப்புத்திட்டம் அமைப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் பிரதமர் இந்த விடயங்களைத் தெரிவித்தார். (க-9)

# இஸ்ரேலில் இரவு விடுதியில் தற்கொலை குண்டுத் தாக்குதல்

## 8 பேர் பலி; 60 பேர் படுகாயம்

(டெல்அவிவ்)

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே நீண்டநாட்களாக மோதல் நடைபெற்று வருகிறது. பலஸ்தனத்தின் காசா, மேற்கு கரைப் பகுதிகளில இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடந்துவதற்குப பழிவாங்கும் நடவடிக்கையாக பலஸ்தீன தற்கொலைப்படை தீவிரவாதிகள் இஸ்ரேலில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்திவருகிறார்கள்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் மரணமடைந்த பிறகு இரு தரப்புக்கும் இடையே சமரச முயற்சிகள் நடந்தன. இதன் ஒரு பகுதியாக இஸ்ரேல் இராணுவம் வாபஸ் பெறத்தொடங்கியது. இஸ்ரேல சிறையல் இருந்து பலஸ்தீன கைதிகளும் படிப்படியாக விடுதலைசெய்யப பட்டு வருகிறார்கள். அனால் இந்த சமரச முயற்சியில் இப்போது திடீர் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் உள்ள ஒரு இரவு விடுதியில் தற்கொலைப் படையின் திடீர் தாக்குதல் நடந்தது. அங்குள்ள கரோக்கோ பகுதியில் உள்ள இரவு விடுதிக்கு சென்ற தீவிரவாதி ஒருவன் தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இதில் அந்த இரவு விடுதியின் முன்பகுதி முழுவதும் இடிந்து தரைமட்டமானது. இரவு விடுதிக்குள் இருந்தவர்களும் விடுத்திகுள் செல்ல வெளியே காத்து நின்றவர்களும் தூக்கிவீசப் பட்டனர்.

இத் தற்கொலைத் குண்டுத்தாக்குதலில், 8பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 60க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனா. குண்டுவெடிதததில் அந்த தற்கொலைப்படைத் தீவிரவாதியும் உடல் சிதறிப் பலியானான. அந்தப் பகுதி முழுவதும புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

பலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் இயங்கிவரும் ஒரு தீவிரவாத இயக்கம் இதற்குப் பொறுப்பு ஏற்றுள்ளது. அமைதி முயற்சியைக் சீர்குலைக்க நடத்தப்பட்ட இந்த வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் மற்றும் பலஸதீனத் தலைவர் முகமது அட்பாஸ் ஆகியோர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். (ற)



லெபனானில் சமீபத்தில் நடந்த குண்டுவெடிப்பில் முன்னாள் அதிபர் உட்பட பலர் பலியானார்கள். இது தொடர்பாக விசாரணை நடத்தும் ஐ.நா குழுவினர் சம்பவ இடத்தைப் பார்வையிடுகின்றனர்.

# சர்காவியின் தலைக்கு 2 கோடி டொலர் பரிசு

(பக்தாத்)

ஈராக்கில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் அமெரிக்கப் படையினர் மீதும் மற்ற நாட்டு ஊழியர்கள் மீதும் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

வெளிநாட்டவர்களைப் பணயக் கைதிகளாக இவர்கள் கடத்திச்செல்கிறார்கள். அபுகுதாப் அல் சர்காவி தலைமையில் பல்வேறு பிரிவுகளாக இந்தத் தீவிரவாதக் கும்பல் இயங்கி வருகிறது.

இந்தத் தீவிரவாதக் கும்பலின் முக்கிய தலைவனும் சர்காவியின் உதவியாளருமான அபுகுதாப் என்பவன இப்போது ஈராக பொலிஸாரிடம் சிக்கி இருக்கிறான். சர்காவியின கார் டிரைவரும பொலிஸாரிடம் சிக்கியுள்ளான்.

இதனைத் தொடர்ந்து சர்காவியும விரைவில் பிடிபடுவான் என்று அமெரிக்கப் படையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். சர்காவியின் தலைக்கு அமெரிக்கா 2 கோடி டொலர் பரிசு அறிவித்துள்ளது. (ற)

# இந்தியர்களுக்கு கார்கில் போர் ஒரு பாடமாக அமைந்துள்ளது

## -பாக்.அதிபர் முஷாரப்



(இஸ்லாமாபாத்)

கார்கில் போர் நமது முக்கிய எதிரிகளான இந்தியர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. காஷ்மீரின் உண்மைநிலையை உலகத்துக்கு உணர்த்தியது என்று பாகிஸ்தானிய அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

இணையத்தளத்தில் வெளியிட்டுளள சுயசரிதையில் அவா மேலும் கூறியிருப்பதாவது,

இந்தியா - பாகிஸ்தான் இடையே பஸ்சேவை தொடங்கப்பட்டமை மிகவும் புகழ்ந்து பேசப்பட்டது. அதைத் தொடர்ந்து கார்கில் போர் ஏற்பட்டது. இப்போர் உண்மைநிலையை உலகத்துக்குப் புரியவைத்தது.

முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானில் பேச்சுவார்த்தை நடத்தியமையானது இநதிய - பாகிஸ்தான் உறவில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. ஆனால், தேர்தலில் பாரதீய ஜனதாககட்சி தோல்வியடைந்தது. இது இருநாடுகளுக்கும் இடையிலான உறவில் தேக்கநிலையை ஏற்படுத்தயது.

ஆனால், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தின்போது என்னைச் சந்தித்துப் பேச இந்தியப் பிரமதர் மன்மோகன்சிங் முடிவுசெய்திருந்தார். இது இத்தேக்க நிலையை உடைத்தது.

நியூயோர்க்கில் இருவரும் கூட்டாக அறிக்கை வெளியிட்டோம். ஜம்மு -காஷ்மீர் உள்ளிட்ட பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிகாடும் வகையில் இது அமைந்தது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிரான நடவடிக்கையை நான் முதலில் தொடங்கவில்லை. நான் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் இருந்தபோது என்னை நீக்கிவிட நவாஸ் ஷெரீப் நடவடிக்கைகளைத் தொடங்கினார். நான் மேற்கொண்ட எதிர் நடவடிக்கை நாட்டின ஆட்சியையே என்னிடம் ஒப்படைத்தது எனக குறிப்பிட்டுள்ளார் முஷாரப. (ற)

# டெலிவிஷன் நிலையம் குண்டு வீசித் தகர்ப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிர வாதிகள் நேற்று பாங்கி மாவட்டத் தில் கோகல்புரில் உள்ள டெலிவிஷன நிலையம் மீது திடீர் தாக்குதல் நடத் தியுள்ளனர்.

தீவிரவாதிகள் வெடிகுண்டு வீசியதில் டெலிவிஷன் நிலையம் அடியோடு தகர்க்கப்பட்டது. இதில் 4 கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள கமராக்களையும் தீவிரவாதிகள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். பாடிபுர் பகுதியில் ரோந்து சுற்றிவந்த இராணுவததினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 10 தீவிரவாதிகள் சுட்டுக் கொலலப்பட்டனர். இராணுவத்தரப்பில் 4 பேர் பலியானதாகத் தெரியவருகிறது. (ற)

# மீண்டும் பறவைக் காய்ச்சல் வியட்நாமில் 13 பேர் பலி

(வியட்நாம்)

வியட்நாமில் கடந்த சில மாதங்களாக ஓய்ந்திருந்த பறவைக் காய்ச்சல் நோய் மீண்டும் வேகமாகப் பரவி வருகிறது.

கடந்த 2003ஆம் ஆண்டு வியட்நாமில் பறவைக் காய்ச்சலுக்கு 32 பேர் பலியானார்கள். கடந்த ஆண்டில் 23 பேர் இந்த நோய்க்குப் பலியானார்கள்.

இந்த ஆண்டு மீண்டும் இந்த நோய் தலைதூக்கியுள்ளது. 18 பேருக்கு இந்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் 13 பேர் இதுவரை பலியாகி உள்ளனர். 5 பேர் மட்டும் சிகிச்சைக்குப பிறகு குணமடைந்து வீடு திருமபியுள்ளனர். (ற)

# ஈராக்கியர்களைத் துன்புறுத்திய 3 பிரிட்டிஷ் வீரர்களுக்கு சிறை

(ஜேர்மன்)

ஈராக் மக்களைத் துன்புறுத்தியதாகத் தொடரப்பட்ட வழககில் பிரிட்டிஷ இராணுவ வீரர்கள் மூவருக்கு சிறைத தண்டனை விதிக்கபபட்டுள்ளது.

டேனியல் கென்யன் (33) என்ற வீரருக்கு 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2003ஆம் ஆணடு மே மாதம் பாஸ்ரா நகரில் நிவாரணப் பொருட்கள் வைக்கபபட்டிருந்த முகாமிலிருந்து பொருள்களைக் கொள்ளையடித்தவர்களைப் பிடித்துக் கொடுமைப்படுத்தயது பற்றி அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் இருநதார் என்றும் சிறைக்கைதி ஒருவரைத் சாக்க மற்றொரு வீரருக்குப் பணம் கொடுத்துத் தூண்டினார் என்றும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மார்க்கூலே (25) என்ற வீரருக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை அளிக்கப்படடுள்ளது. ஈராக்கியர் ஒருவரைத பளுதூக்கிச் செல்லும் வாகனத்தின மேல் கட்டி இரக்கமற்றமுறையில் வணடியை வேகமாக ஓட்டி கொடுமைபடுத்தினார். மற்றொரு ஈராக்கியரை நிர்வாணமாக்கிப் பாலியல செயல்களில் ஈடுபடுத்தினார் என்பது இவர் மீதான குற்றச்சாட்டு.

மற்றும் ஈராக்கியரைத் தாக்கி அவர் மீது ஏறி நின்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள டேரன் லார்ஜின் (30) என்பவருக்கு 5மாதச் சிறைத்தணடனை விதிக்கப்பட்டுள்ளது. (ற)




மும்பையில் உள்ள ஆம்பிவேளி சகாரா லேக்சிட்டியில் திருமணமான பெண்களுக்கான உலக அழகிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 2005ஆம் ஆண்டுக்கான மிஸஸ் உலக அழகியாக தெரிவுசெய்யப்பட்ட இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த சிமா பாகருக்கு 2004ஆம் ஆண்டின் மிஸஸ் உலக அழகி சூஸன்னா வீச்செய்ன்ரட் கிரீடம் சூட்டிய காட்சி.

## கடந்த ஆண்டு மட்டும் சீனாவில் சாலை விபத்தில் 1,07,000 பேர் பலி

சாலை விபத்துக்கள் அதிகம் நடப்பது சீனாவில்தான்.

சாங்குவான் மாகாணத்தில் அளவுக்கு அதிகமான ஆட்களை ஏற்றிக்கொண்டுசென்ற பஸ் ஒன்று நேற்றுக்காலை சாலை ஓரத்தில் இருநத பள்ளத்தில் தலைக்குப்புற விழுந்தது. இதில் 16 பேர் பலியாகினர்.

மேலும் கான்சு மாகாணத்தில் பயணிகள் பஸ்சும் எதிரே வந்த வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் 11 பேர் உடல் நசுங்கிப் பலியாகினர்.

சீனாவில் சராசரி ஒருநாளைக்கு 300 பேர்வரை சாலை விபத்துக்களில் பலியாகிறார்கள். கடந்த ஆண்டு 1 லட்சத்து 7 ஆயிரம் பேர் விபத்தில் பலியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ற)

உலக தரிசனம்

## சுமத்திராவில் மீண்டும் நிலநடுக்கம்

(சுமத்திரா)

சுனாமி தாக்குதலுக்குப் பின்னர் சுமத்திராத் தீவில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடந்துவருகிறது.

ஆனால் சோகம் மட்டும் இன்னும மறையவில்லை.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் சுமத்திராத் தீவின் வடக்குப் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 5 புள்ளிகள் பதிவான இந்த நிலநடுக்கத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. (ற)

## அமோக விற்பனையில் பாப்பரசரின் புத்தகம்

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 'மெம்மரி அன்ட் ஐடென்டிட்டி' என்ற புத்தகத்தை எழுதியுளளார்.

இத்தாலி உட்பட பல்வேறு நாடுகளில் இந்தப் புத்தகம் விற்பனைக்கு வெளிவந்துவிட்டது.

பாப்பரசரின் உடல் நலக்குறைவு மற்றும் தொண்டையில் செய்யப்பட்ட சததிரசிகிச்சைப் பிறகு இநதப் புததகத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

கடந்த 2 நாட்களில் மட்டும் இததாலியில் 50 ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்த்தன. இதுவரை இத்தாலியல் 4 இலட்சம் பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் பாப்பரசா ஓரினச்சேர்க்கை, திருமணம், கருக்கலைப்பு ஆகியவற்றுக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருப்பதுடன் தன்மீது மேற்கொள்ளபபட்ட கொலை முயற்சி பற்றியும குறிப்பிட்டிருக்கிறார். (ற)

# மட்டு. பூநொச்சிமுனையில் தற்காலிக குடியிருப்பு திறப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே மீன்பிடித் தொழிலையே மூலதனமாகக் கொண்டு வாழ்ந்து வந்த குடும்பங்களுள் பூநொச்சி முனை முஸ்லிம் கிராம மக்கள் ஆழிப்பேரலையின் அனர்த்தங்களுக்குள் சிக்குண்ட நிலையில் யாவற்றையும் இழந்து நிர்க்கதியாகி யுள்ளனர்.

பூநொச்சிமுனை கிராமமானது ஒரு மீன்பிடி இறங்குதுறையையும் கொண்டுள்ளதால் இக்கிராம மக்கள் மட்டும்மல்லாது காத்தான்குடி, மஞ்சத்தொடுவாய் ஆகியனவும் மீன்பிடி முக்கியத்துவம் வாய்ந்ததொரு கிராமமாகவும் சிறந்து விளங்கி வந்திருக்கின்றது.

இந்நிலையில் எவ்வித பாகுபாடுகளுக்கும் அப்பால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரண மீள்புனரமைப்பு பணிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக தற்காலிக குடிமனைகளை அமைக்கும் வேலைத்திட்டச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டு வருகின்றது. அந்தவகையில் அமைக்கப்பட்ட மற்றுமொரு குடியிருப்பு பூநொச்சிமுனை முஸ்லிம் கிராமத்தில் கடந்த வெள்ளக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

75 வீடுகளைக்கொண்ட இக்குடியிருப்புத் திறப்புவிழா மீனவர் கூட்டுறவுச்சங்கங்களின் செயலாளர் எம்.வை.ஆதம்லெப்பை தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் என்.சங்கர, மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் ஏ.எல்.அத்துல் ஜஷீத், மாவட்டப் பணிப்பாளர் கே.தேவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து தற்காலிக குடிமனைகளில் முதலாவது குடிமனையை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட என்.சங்கர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் இதனைத் திறந்து வைதது அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது வழமை. அந்த வகையில இக்கிராம மக்களுக்கு ஏற்பட்ட துன்ப நிலையினை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. ஆயினும் இவர்களுக்குரிய முற்று முழுதான சேவையினை மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருவது வரவேற்கத்தக்கதெனக் கூறினார். (ற)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ இந்து ஆலயங்கள் பின்னடிக்கின்றன

யாழ.மாவட்டத்தில் 2ஆயிரத்து 361 இந்து வணக்கஸ் தலங்கள் இருக்கின்ற போதிலும்கூட இவற்றில் ஒரு சதவீதமானவை கூட பொதுமக்களுக்கான பொதுத் தேவைகளையும், சேவைகளையும் வழங்காமல் இருந்துவருவது குறித்து சமுதாய ஆர்வலாகளும் நலன் விரும்பிகளும் மிகவும் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

இதேசமயம் மாவட்டத்தில் இயங்குகினற ஒரு குறிப்பிட்ட சில இந்து ஆலயங்கள் மட்டுமே பொது மக்கள் எதிர்கொள்ளகின்ற இடாகளின் போது தமது சேவைகளை வழங்கி வருகின்றன. ஆனால் பெரும்பாலான இந்து வணக்கஸதலங்கள் தத்தமது பக்தர்கள் அடியார்கள் மற்றும் பொது மக்களிடம் நிதியை வசூலித்து ஆலயங்களை அபிவிருத்திசெயவதிலும், வர்ணஙகளைப் பூசுவதிலுமே செலவிட்டுவருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய இந்து ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் தாமாகவே முன்வந்து யுத்தததினாலும் இயற்கைப் பேரழிவுகளினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்யவும், சேவ்வை செய்யவும் முன்வரவேண்டும் எனப பலதரப்பாலும் அழைப்புகள் விடுக்கப்பட்ட போதிலும்கூட, இது எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதேசமயம் இங்கிருக்கின்ற பல இந்து ஆலயங்கள் தத்தம் பகுதிகளில் இருந்து வெளிநாடுகளில் புலம்பெயர்ந்திருக்கின்றவர்களிடமும் வருடா வருடம் பெருந்தொகை நிதி அன்பளிப்புக்களைப பெற்றுவருவதுடன், நாட்டில் இருக்கின்ற இந்து சமயத்தின் திணைக்களததிடம் இருந்து தமக்கான நிதிகளைப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்காகும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்றிருந்த யுத்த அனர்த்தங்களின்போது அழிக்கப்பட்ட, அல்லது சேதமாககப்பட்ட இந்து ஆலயங்களில் இன்னமும் பல எத்தகைய புனருத்தாரைணப் பணிகளும் செய்யப்படாமல் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 292வரையான கிறீஸ்தவ வணக்கஸ்தலங்கள் காலத்துக்குக் காலம் மக்களுக்கான துயர்துடைப்புப் பணிகளையும் சேவைகளையும் திறமபடச்செய்து வருகின்றமை குறித்து பொது மக்கள் மத்தியில் திருபதி தெரிவிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம், யாழ்ப்பாணம் மாவட்டதில் 2361 இந்து ஆலயங்களும், 292 கறீஸ்தவ தேவாலயங்களும், 22 முஸ்லீம் பள்ளிவாசல்களும், 5 பௌத்த விகாரைகளும் சமயப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.(ப-16)

# பாடசாலை நேரத்தில் விளையாட்டு பயிற்சிகளை நடாத்த வேண்டாம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகளுக்கு பாடசாலை நேரத்தை பயன்படுத்தக்கூடாது எனறு கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை வழங்கியிருக்கின்றது.

விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் இறுதிநாள் வைபவங்கள் அனைத்தையும விடுமுறை தினஙகளில் நடத்துமாறும் கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

வலய மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் மே.மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டப் போட்டிகள் யூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்பட்டு அதன் பெறு பேறுகளை கல்விஅமைச்சுக்கு அனுபபி வைக்குமாறு அமைச்சின் மேதிலக செயலளர் எஸ்.எல்.குணவர்த்தன தெரிவித்துள்ளார். (க-9)

## "என் நெஞ்சம் உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது"



### தவக்காலச் சிந்தனை

இயேசு தன்னுடைய சொந்த ஊரிலே அதாவது உறவினர்களாலேயே புறக்கணிக்கப்படுகின்றார். தங்களுடைய ஊருக்கு அதிகமாகச் செய்வார் என்ற எண்ணமும், எங்களுடையவர் எங்களுக்கு மட்டுமே என்ற தன்னலமும், இவரை வைத்து நமது ஊரை நிறைவு செய்து விடலாம் என்ற வியாபார நோக்குடைய எண்ணங்களை இயேசு சிதறடிக்கின்றார். எனவே புறம் தள்ளப் படுகின்றார். ஆனால் இதை இயேசு ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தனது பயணத்தை தொடருகிறார். தான் ஏற்றுக்கொண்ட நோக்கத்திற்காக உறவுகளை இழக்கத் துணிகின்றார்.

இறைவார்த்தையைக் கேட்டு அதை நிறைவு செய்பவரே என் தாயும் தந்தையும் சகோதர சகோதரியும் ஆவார் என்கிறார் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துவிட்ட எவரும் அந்த இலட்சியத்திற்காக உறவுகளை இழந்தே ஆகவேண்டும்.

அதனால் பல இழப்புகள் மார்க்சின் இறுதிச் சடங்கில் 50பேர்கூட இல்லை. இயேசுவின் சிலுவைச் சாவும் அப்படித்தான். ஆதரவு கிடைக்கும் என நம்பி இலட்சியவாதிகள் களத்தில் இறங்குவதில்லை.

காவலன்

விளையாட்டு

3-வது போட்டியிலும் வெற்றி

தாய ஆர்வலர்களும் நலன் விரும் பிகளும் மிகவும் கவலையும் அதி ருப்தியும் அடைந்துள்ளனர்.

இதேசமயம் மாவட்டத்தில் இயங் குகின்ற ஒரு குறிப்பிட்ட சில இந்து ஆலயங்கள் மட்டுமே பொது மக் கள் எதிர்கொள்ளகின்ற இடர்களின் போது தமது சேவைகளை வழங்கி வருகின்றன. ஆனால் பெரும்பாலான இந்து வணக்கஸ்தலங்கள் தத்தமது பக்தர்கள் அடியார்கள் மற்றும் பொது மக்களிடம் நிதியை வசூலித்து ஆல யங்களை அபிவிருத்திசெயவதிலும், வர்ணங்களைப் பூசுவதிலுமே செல விட்டுவருகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக் பட்ட போதிலும்கூட, இது எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதேசமயம் இங்கிருக்கின்ற பல இந்து ஆலயங்கள் தத்தம் பகுதிகளில் இருந்து வெளிநாடு களில் புலம்பெயர்ந்திருக்கின்ற வர்களிடமும் வருடா வருடம் பெருந் தொகை நிதி அன்பளிப்புக்களைப பெற்றுவருவதுடன், நாட்டில் இருக் கின்ற இந்து சமயத்தின் திணைக் களததிடம் இருந்து தமக்கான நிதி களைப் பெற்று வருவதும் குறிப் பிடத்தக்காகும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரண்டு தசாப்தங்களாக

இதேசமயம், யாழ்ப்பாணம் மாவட் டத்தில் இருக்கக்கூடிய 292வரை யான கிறீஸ்தவ வணக்கஸ்தலங் கள் காலத்துக்குக் காலம் மக் களுக்கான துயர்துடைப்புப் பணி களையும் சேவைகளையும் திறம படச்செய்து வருகின்றமை குறித்து பொது மக்கள் மத்தியில் திருபதி தெரிவிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம், யாழ்ப்பாணம் மாவட் டததில் 2361 இந்து ஆலயங்களும், 292 கறீஸ்தவ தேவாலயங்களும், 22 முஸ்லீம் பள்ளிவாசல்களும், 5 பௌத்த விகாரைகளும் சமயப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.(ப-16)

துணிகின்றார்.

இறைவார்த்தையைக் கேட்டு அதை நிறைவு செய்பவரே என் தாயும் தந்தையும் சகோதர சகோதரியும் ஆவார் என்கிறார் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துவிட்ட எவரும் அந்த இலட்சியத்திற்காக உறவுகளை இழந்தே ஆகவேண்டும்.

அதனால் பல இழப்புகள் மார்க்சின் இறுதிச் சடங்கில் 50பேர்கூட இல்லை. இயேசுவின் சிலுவைச் சாவும் அப்படித் தான். ஆதரவு 'கிடைக்கும் என நம்பி இலட்சியவாதிகள் களத்தில் இறங்குவதில்லை.

காவலன்

# விளையாட்டு செய்திகள்

## ஹொக்கி வீரர் தாகூர் தாக்கப்பட்டு படுகாயம்

இந்திய விளையாட்டுத் துறை யைக் களங்கப்படுத்தும் ஓர் சம்ப வம் உள்ளூர் ஹொக்கியப் போட்டி ஒன்றில் நடைபெற்றிருக்கிறது.

இந்திய பிரபல ஹொக்கி வீரர் தீபக் தாகூர் அவருடன் தேசிய அணி யில் ஒன்றாக இணைந்து விளை யாடிய இன்னொரு வீரரான கன் வல் பரீத் சிங் எனும் வீரரால் வெறித தன மாக ஆடுகளத்தில் தாக்கப்பட்டு



படுகாயமடைந்ததன் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

புதுடில்லியில் நடைபெறும் ரஞ் சித் சிங் ஹொக்கித் தொடரில் பிர பல உள்ளூர் அணிகள் மோதுகின் றன. அந்த வகையில் நேற்று முன் தினம் இந்தியன் ஒயில் நிறுவன அணிககும பஞ்சாப் பொலிஸ் அணிக கும் இடையே நடைபெற்ற போட்டியில இந்தியன் ஒயில் அணி வீரர் ஒரு வரை முரட்டுத்தனமாகத் தடுத்து பந்தைக கடததினார். பஞ்சாப் பொலிஸ வீரர் கன்வல் பரீத் சிங்.

இதற்கு கடும் ஆட்சேபம் தெரி விததார் இந்தியன் ஒயில் வீரர் தீபக தாகூர். கோபம் கொண்ட கன்வல தீபக் தாகூரை கையிலிருந்த ஹொக்கி மட்டையால் கண்மண் தெரியாது அடித்து நொறுக்கினார்.

முகத்தில் பலத்த அடிபட்டதால் தீபத் தாகூரின் மூக்கிலிருந்து அதி கமாக இரதம் சொட்டி யது. மயக்க முற்று கீழே விழுந்த தாகூர் உடனடி யாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தாகூர் ஹொக்கி மட் டையால் முகத்தில் தாக்கப்பட்டதால் பலத்த காயங்கள் ஏற்பட்டிருக் கிறது. மூக்கு எலும்பு முறிந்ததுடன், முகம் மற்றும் வலது கையிலும் பலத்தநோ ஏற்படடிருக கிறது.

இச்சம்பவம் ரசிகர்களிடையே பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்திய அதேவேளை, பஞ்சாப் அணி இத் தொட ரிலிருந்தும் வெளியேற்றப்பட்டிருக் கிறது.

கன்வல் பரீத் சிங்கின் இச் செய லுககு இந்திய ஹொக்கிக் கூட்ட மைப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளதுடன், அவர் மீது கடும் நட வடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டுள ளது. (ந-7)

## 3-வது போட்டியிலும் வெற்றி தொடரை கைப்பற்றியது ஆஸி.

அவுஸ்திரேலிய- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றா வது ஒரு நாள் போட்டியிலும் அவுஸ்



திரேலிய அணி 86 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இவ் வெற்றி மூலம் 3:0 என்ற அடிப்படையில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றது.

நேற்று முன்தினம் ஒக்லண்ட்டில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட விருப்பம் தெரிவித்து களமிறங்கியது.

கில்கிறிஸ்டும் கேடிச்சும் ஆட் டத்தை தொடங்கினர். ஆயினும் அவுஸ்



திரேலிய அணியின் ஆரம்ப விக்கெற றுக்கள் விரைவாக வீழ்ந்தன. ஒரு நிலையில் கேடிச் அரைச்சதம் பெற்ற போதும் அவுஸ்திரேலிய அணி 5 விக் கெற்றுககளை இழந்து 128 ஓட்டங் களை மாத்திரமே பெற்றிருந்தது.

ஆறாவது விக்கெற்றுக்காக ஜோடி சோந்த கிளார்க் மற்றும் ஹுசே இரு வரும் சேர்ந்து இறுதிவரை ஆட்ட மிழக்காது ஆடி 136 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பில் ஆறாவது விக்கெற் இணைப்பாட் டமாக பெறப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

கேடிச 58 ஓட்டங்களுடன் ஆட்ட மிழகக கிளார்க் 71 ஓட்டங்களை யும்ஹுசே 65 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்து வீச்சில் வெற்றோரி-2 மில்ஸ், கெயின்ஸ் இருவரும் தலா ஒரு விக் கெற்றுக்களை வீழ்த்தினர். அவுஸ்தி ரேலிய அணி தனது 50 ஓவரில் 5 விககெற்றுக்களை இழந்து 264 ஓட் டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 41.5 ஓவரில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதால் தோல்வியடைந்தது.

நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங் 1 ஓட்டத்தை மாத்திரமே பெற்று ஆட்டமிழந்தார். பட்ஸ் காயம காரணமாக 3 ஓட்டங்களுடனேயே ஆட முடியாது களத்தை விட்டு வெளி யேறினார்.

நியூசிலாந்து அணி சார்பில் மார் சல ஆகக்கூடுதலாக 55 ஓட்டங்களைப் பெற்றார். நாதன் அஸ்லே-27, மக் மிலன்-26 மக்கொலம்-23 ஓட்டங் களை எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹொக் 3 விக்கெற் றுக்களையும் பிரட்லீ 2 விக்கெற்றுக களையும் காஸ்பரோ விஸ் சைமன்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

இனனும் இரண்டு போட்டிகள் நடை பெறவேண்டிய நிலையில் தொடர்ந்து 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றதால் அவுஸ்திரேலிய அணி இப்போது தொட ரைக் கைப்பற்றியுள்ளது. (ந-7)

## ஆனந்திற்கு 2 ஆம் இடம்

ஸ்பெயினில் நடைபெறும் 22ஆவது சூப்பர் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சம்பியன்ஷிப் போட்டிகளில் விஸ் வநாதன் ஆனந் விளையாடிய அவ ரது இரண்டாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.


ஹங்கேரி வீரர் பீட்டர் லீகோவு டன் இடம்பெற்ற இப்போட்டியில் இரு வரும் மிகக் கவனமாக காய்களை நகர்த்தினர். 24 ஆவது காய் நகர்த் தலில் இருவரும் போட்டியை வெற்றி தோல் வியின்றி முடித்துக்கொள்ள உடன்பட்டனர்.

இத்தொடரின் இன்னொரு போட டியில் ரஷ்யாவின் முதல்தர வீரர் காஸ் பரோவும் ஸ்பெயின் வீரர் பிரான்ஸிஸ் கோவும் மோதியதில் காஸ்பரோ வெற்றி பெற்றார்.

இதுவரை 3 போட்டிகளை விளை யாடிய காஸ்ப்ரோ 2 புள்ளிகளைப பெற்று முதலிடத்திலும், ஆனந் 1.5 புள்ளியைப் பெற்று இரண்டா மிடத் திலும் உள்ளனர். (ந-7)

# தேசிய பேரழிவு செயலாட்சிப் பேரவையின் பணிகள் மாவட்ட மட்டத்திலும் விஸ்தரிக்கப்பட வேண்டும்

## சபையில் ரவிராஜ் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

**தேசிய பேரழிவு செயலாட்சிப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியில் இருக்கின்ற தலைவர்கள் ஆகியோர் உள்ளடக்கப்படவேண்டும். அத்துடன், பேரவையின் பணிகள் மாவட்ட மட்டத்திலும் விஸ்தரிக்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் சபையில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.**

தேசியப் பேரழிவு செயலாட்சி சட்டமூல விவாதத்தில் உரையாற்றிய ரவிராஜ் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பேரவையில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சாகள் மாத்திரமே அங்கம் பெறமுடியும் என இந்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் இதனைத் தேசியப் பேரவை எனறு எபபடி எம்மால் கூறமுடியும். தேசியம் எங்கே உள்ளது? இதனை அரசாங்கத்தின் அதிகாரசபை எனறு மாத்திரமே கூறமுடியும்.

அதிகாரசபையில் எவ்வாறு ஊழல்கள் நடைபெறுகின்றதோ அவ்வாறுதான் இந்தப் பேரவையிலும் ஊழல்கள் இடம்பெற வாய்ப்பு உண்டு. இதனைத் தேசியத் பேரழிவு செயலாட்சிப் பேரவை எனக் கூறவேண்டுமானால் எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சியில் இருக்கின்ற தலைவர்கள் ஆகியோரும் உள்ளடக்கப்பட வேண்டும்.

அத்துடன் மாவட்ட மட்டத்தல் அரச அதிபா அநத மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள ஆகியோரும் இதில் இடம்பெற வேண்டும். இந்தப் பேரவை தனியே கொழும்பிலிருந்து மாத்திரம் தீர்மானங்களை எடுக்க முடியாது. அதற்காகவே பிற மாவட்ட மட்டத்திலும் பேரவையின் பணிகள் பரவலாக்கப்பட வேண்டும்.

அவ்வாறானதொரு நிலையிலேதான் தேசியப பேரழிவு செயலாட்சிப் பேரவை என அதனைக் கூறமுடியும். இதனை இந்தச் சட்டமூலத்திற்கான எமது திருத்தமாக நாங்கள் முன்வைக்கின்றோம். எவ்வாறாயினும், இந்தச சட்டமூலம் தற்போதைகது நிறைவேற்றப்படமாட்டாது என அறிகின்றோம். அதற்கு முன்னா இதனைத் திருத்தமாக ஏற்றுக கொள்ளவேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் 100 மீற்றருக்கு அப்பால் கட்டடங்களை அமைக்கவேண்டும் என அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்குப் பலா சர்ச்சைப்படுகின்றனர். தங்கள் நிலபுலங்களை விட்டுக் கொடுக்க முடியாது எனவும் வாதிட்டு வருகின்றனர்.

ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கடந்த 20 வருடத்திற்கும் மேலாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் 20 கிலோ மீற்றருக்கும அப்பால் சில பிரதேசங்களுக்கு எமது மக்கள் செலலமுடியாத நிலையுள்ளது. அந்தப் பிரதேசங்களில் எத்தனை பாடசாலைகள், எத்தனை கோவில்கள், எத்தனை ஆயிரம் வீடுகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன தெரியுமா? இதனைப் பற்றி யாரும் பேசமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

# செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி குயிலின்பனுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் குயிலினபனுக்கும், மட்டககளப்பு-அமபாறை மாவட்ட சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி கிறிஸ்ரினாவுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் தம்புலுவில் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இசசந்திபபு நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அண்மை நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டமை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் நிவாரணப் பொருட்கள் தாமதமாக வழங்கப்படுகின்றமை என்பன பறறி தமிழழ விடுதலைப்புலிகளால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. (ற-4)

## அரச நிறுவனங்களில் பயிற்சி பெறும்

# பட்டதாரிகளுக்கு தகுந்த துறைகளில் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்குத் தகுநத துறைகளில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பட்டதாரிகளின் தராதரங்களைப் பரிசீலனை செய்த பின்னரே இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

சுமார் 20ஆயிரம் பட்டதாாகள் கஷ்டப் பிரதேசங்களில் ஆங்கில, கணித பாடங்களைப் போதிப்பதற்காக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரச நிறுவனங்களில் உள்ள உயர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

இந்தப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் யாராக இருந்தாலும் பாகுபாடின்றி அந்த பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

பட்டதாரிகளின் சேவை நாட்டின் அபிவிருத்திகது கூடியளவில் இனி வருங்காலங்களில் பயன்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

## பயமுறுத்தலால் சாட்சிகள் ஒதுங்கல்;

# கைவிடப்படவேண்டிய நிலையில் 85 சதவீத கொலை வழக்குகள்

(கொழும்பு)

கொலைக்குற்றச்சாட்டின் அடிப்படையில் 85 சதவீதமான வழக்குகள் சாட்சிகள் இல்லாத காரணத்தினால் விசாரணை செய்யப்படாமல் கைவிடப்படவேணடிய நிலையிலிருப்பதாக சொலிஸ்ரர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகள் தொடர்பான, நீண்டகால நடைமுறைகள் காரணமாக சாட்சிகள் எதிரிகளினால் பயமுறுத்தபபடுகின்றனர். இதனால் சாட்சியம் அளிப்பதிலிருந்து சாட்சிகள் ஒதுங்கிக் கொள்ளவேண்டிய நிலையேற்படுகின்றது.

இதன் காரணமாகக் குற்றச் செயல்களை நிரூபிக்க முடியாமல் போகின்றது.

எனவே, நீதிமன்றங்களிலும் வெளியிலும சாடசிகளுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும சுட்டிக்காட்டியுள்ளார். (ற-8)

# மட்டு. மக்களின் எதிர்ப்பினால் ஜே.வி.பியினர் வெளியேற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பெரியகலலாறு கிராமத்தல் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிககபபட்ட மக்களுககுத தற்காலிக இருபபிடஙகளை அமைதது்க் கொடுக்கச் செனற ஜே.வி.பியினா மக்களின் எதிர்ப்புக் காரணமாக அங்கிருந்த வெளியேறினா.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இரவோடிரவாக மேல்மாகாண சபை உறுப்பினா காஞ்சன பரிஸ் தலைமையில் 50ற்கும் மேற்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்கள் அங்கு சென்றிருந்தனர். நேற்று முன்தினம் காலை ஜே.வி.பியின் நிவாரணப்பணி எனற தலைப்பில் தனியார் காணியொன்றில் பதாகையொன்று கட்டப்பட்டு சிலா தற்காலிக இருப்பிடங்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதனை நேற்றுமுன்தினம் காலை அவதானித்த கிராமத்து மக்கள் அங்கு கூடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடடனா. 'உனனுடைய வீடு எங்களுக்குத் தேவை இல்லை', 'ஜே.வி.பி.யே வெளியேறு' 'சிங்கள மக்களின் நிவாரண உதவிகளை ஏற்போம். ஆனால் இனவாதியான உனது உதவி எமகது வேணடாம்'. இப்படிப் பல கோசங்களை அங்கு எழுப்பினார்கள்.

இதனையடுத்து அந்த இடத்திற்கு ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதனையடுத்து மாலைக்குள் ஜே.வி.பியினா அங்கிருந்து வெளியேறியதாகத் தெரியவருகிறது. (ற-4)

# கல்வித்துறையை அரசு ஒருபோதும் தனியார் மயப்படுத்த மாட்டாது

## பிரதமர் மஹிந்த உறுதிமொழி

(கொழும்பு)

கல்வித்துறையை அரசாங்கம் ஒருபோதும் தனியார் மயப்



படுத்தமாட்டாது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமகாராம பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலநதுகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் கல்வியை வழங்குவது அரசாங்கத்தின பொறுப்பாகும். பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெறாத மாணவர்களுக்கு வேறு தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்ற வகையில் செயற்திட்டமொன்றைத் தயாரிக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இச்செயற்திட்டம் விரைவில் தயாரிககப்படவுள்ளது எனவும் குறிப்பிட்டார். (ற-8)

# அடையாள அட்டைகளை வழங்க மட்டு.இல் நடமாடும் சேவை

(மட்டக்களப்பு)

சுனாமிப் பேரலைகளினால் மட்டககளப்பு மாவட்டத்தல் தேசிய அடையாள அடடைகளை இழந்தவர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்கும் விசேட நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவை மட்டக்களப்பு ஆரையம்பதி, செங்கலடி, களுவாஞ்சிக்குடி மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளா பிரிவுகளில் இடம்பெற்றது.

சுமார் ஆயிரக்கணக்கானோா தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக இச்சேவைக்கு வருகை தந்திருந்தனர்.

புகைப்படம், சத்தியக் கடதாசி மற்றும் கிராமசேவையாளர்களின் அறிக்கைகள எனபன இவ் நடமாடும் சேவையின்மூலம் இலவசமாக பெறககூடிய ஏறபாடுகளை திணைக்களம் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

## திருமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு

# ரூ.40 ஆயிரம் பெறுமதியான தற்காலிக வீடுகள் அமைக்கப்படும்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமிப் பேரலைகளினால வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடியாக தற்காலிக வடுகள் அமைத்துக்கொடுக்கப்படுமென்று அத்தியாவசிய சேவைகள ஆணையாளர் நாயகம் திலக்ரணவி ராஜா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் இடைக்கால இருப்பிட கருத்திட்ட அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்காலிக வீடுகள் ஒவ்வொன்றும் தலா 40ஆயிரம் ரூபா செலவில் 200 சதுர அடியில் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

## இன்று ஒரு தகவல்

# தர்மமும் கர்வமும்

தர்மம் தலைகாக்கும்! என்று பெரியவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். எதற்காக? எல்லோரும் தலையைக் காத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவா? அப்படி இல்லை. ஒருவர் செய்யும் தர்மம் அவரது தலை முறையையே காப்பாற்ற வேண்டும் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

பத்து ரூபாவை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு ஒருவர் ஊர் முழுவதும் அதைச் சொல்வார் என்றால் அதற்குப் பெயர் தர்மமில்லை. விளம்பரம். பசி என்று சொல்லிக்கொண்டு ஒருவர் வருகிறார். நாம் அவரைக் கூப்பிட்டு உட்கார வைத்து சோறு போடுகிறோம் என்றால் அவரது பசி தீரவேண்டும் என்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும். அவருடனே நாமும் உட்கார்ந்து சாப்பிட்டு அதைப் படம்பிடித்து விளம்பரப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதற்கு வேறு நோக்கம் என்று அர்த்தம்.

தர்மம் செய்பவருக்குக் கர்வம் இருக்கக் கூடாது என்ற கருத்தை புராணங்களே வலியுறுத்தியிருக்கின்றன. தர்மத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர் ஏழை எளியவர்கள் மீது இரக்கம் கொண்டவர். தாராளமாகத் தர்மம் செய்பவர். அப்படிப்பட்ட தர்ம புத்திரருக்கு ஒருமுறை ஈகைக் குணத்தைப் பற்றி லேசான கர்வம் உண்டானதாம். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அதைப் புரிந்து கொண்டார். “சரி இவரை இப்படியே விட்டுவிடக் கூடாது. கொஞ்சம் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும்” என்று முடிவு செய்தார்.

ஒருநாள் அவர் தர்மரிடம் வந்தார். “வா இப்படியே வெளியே சென்று வருவோம்” என்று வழக்கம் போல் அழைத்தார். தர்மரும் உடனே புறப்பட்டார். இருவரும் சேர்ந்து போய்க் கொண்டே இருந்தார்கள். அப்படியே பாதாள உலகத்திற்குப் போய் விட்டார்கள்.

அப்போது பாதாள லோகத்தை மகாபலி சக்கரவர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்தார். மகாபலி தான தர்மம் செய்வதில் மிகவும் பெரியவர். அவரிடமிருந்த விருந்தோம்பும் பண்பை உலகம் முழுவதும் பாராட்டிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணரும் தர்மரும் பாதாளலோகத்திலுள்ள ஒரு வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

தர்மர் ஒரு வீட்டுக்குப் போய் “குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்” என்று கேட்டார். அந்த வீட்டுப் பெண்மணி ஒரு தங்கக் கிண்ணத்தில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார். தர்மர் அதை வாங்கி தண்ணீரைக் குடித்துவிட்டுக் கிண்ணத்தைத் திருப்பிக் கொடுத்தார். அவர் அதைத் திருப்பி வாங்க மாட்டேன் என்று கூறிவிட்டார். “ஐயா எங்கள் நாட்டில் ஒருமுறை கொடுப்பதைத் திருப்பி வாங்கும் பழக்கம் இல்லை. அதுமட்டுமல்ல ஒருமுறை உபயோகப்படுத்தியதை அது தங்கமாக இருந்தாலும் தூக்கி எறிந்து விடுவோம்” என்றார். தர்மருக்கு மிகவும் ஆச்சரியம். அந்த நாட்டு மக்களின் செல்வச் செழிப்பைப் புரிந்து கொண்டார்.

அதன் பின் தர்மரும் ஸ்ரீகிருஷ்ணரும் புறப்பட்டு நேராக மகாபலிராஜாவின் அரண்மனைக்குப் போனார்கள். ராஜாவிடம் தருமரை அறிமுகப்படுத்தினார் ஸ்ரீ கிருஷ்ணர். “அரசே! இன்று தர்மபுத்திரரை தங்கள் ராஜ்யத்திற்கு அழைத்து வந்திருக்கிறேன். இவர்தான தருமங்கள் செய்வதில் மிகவும் புகழ் பெற்றவர். ஒவ்வொருநாளும் இவர் 500 பேருக்கு அன்னதானம் செய்கிறார்” என்றார்.

இதைக் கேட்டதும் மகாபலி உடனே தனது இரண்டு காதுகளையும் கையால் பொத்திக் கொண்டார். நீங்கள் சொல்லும் அந்த சேதி எனது காதில் விழ வேண்டாம். என்னிடம் அதைச் சொல்லாதீர்கள். அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் கேட்கத் தயாராக இல்லை. இங்கே எனது ராஜ்யத்தில் நான் தானம் கொடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்கிறேன். அதை வாங்கிக் கொள்வதற்கு ஒருவர் கூடக் கிடைக்கவில்லை. அந்த நிலையில் யாருமே இல்லை.

ஆனால்... நீங்களோ தர்மர் தினமும் 500 பேருக்கு அன்னதானம் செய்வதாகச் சொல்கிறீர்கள். அப்படியென்றால் அவரது ராஜ்யத்தில் ஐந்நூறு ஏழைகள் இருப்பதாக அர்த்தம். இதிலிருந்து அவர் எப்படி ஆட்சி செய்கிறார் என்பது நன்கு புரிகிறது. அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு நான் கொஞ்சம் கூடத் தயாராக இல்லை என்று கூறிவிட்டார் மகாபலி சக்கரவர்த்தி. இதைக் கேட்டதும் தர்மருக்கு வெட்கமாகி விட்டது. தலை குனிந்தார். அங்கே இருந்த கர்வமும் போய்விட்டது.

இந்தக் கதையை சுவாமி ஒருவர் சொல்லியிருக்கிறார். எதற்காகவென்றால் தர்மம், கர்வத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக. நம்மில் சிலர் பிள்ளைகளுக்கு தர்மர் என்றே பெயர் வைப்பார்கள். எப்படியாவது தர்ம சிந்தனை வரட்டுமே என்பதற்காக.

ஒரு பெரியவருக்கு ஐந்து பிள்ளைகள் . ஐந்து பிள்ளைகளுக்கும் பஞ்ச பாண்டவர்களின் பெயரையே வைத்தார். அவர்களை மாதிரியே வாழவேண்டும் என்பதற்காக. நீண்டநாட்கள் கழித்து அந்தப் பெரியவரை கடைத் தெருவில் பார்த்து ஒருவர் கேட்டார். “என்ன பெரியவரே! உங்கள் பிள்ளைகள் இப்போது எப்படி இருக்கிறார்கள்? ’என்றார். “பஞ்ச பாண்டவர்களின் பெயரை அவர்களுக்கு வைத்தேன். பெயருக்குத் தகுந்த மாதிரியே இருக்கிறார்கள்” என்றார் பெரியவர். “அப்படியா?” என்றார் அவர். “ஆம்! சொத்து முழுவதையும் சூதாட்டத்திலேயே விட்டுவிட்டார்கள்” என்றார் பெரியவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்த வாய்ப்பில்லை

## கனேடிய வானொலி கருத்துக்கணிப்பு

(ரொறன்ரோ)

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இலங்கை அர சாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்து வதற்கு வாய்ப்பில்லையென கனேடிய வானொலி யொன்று நடாத்திய கருத்துக் கணிப்பிலிருந்து தெரிய வந்துள்ளது.**

இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமா? இல்லைய்யா? என்ற தொலைபேசிக் கருத்துக்கணிப்பு கனடாவில் இயங்கும் வானொலியான சி.எம்.ஆர். பண்பலை வரிசையில் நேற்று முன் தினமிரவு நடாத்தப்பட்டது.

இந்தக் கருத்துக் கணிப்பின்படி பெரும்பாலான மக்கள் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் - விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமாட்டாது என்று தெரிவித்துள்ளனர்.

சி.எம்.ஆர். தமிழ் எவ்.எம். வானொலியில் இடம்பெற்ற இந்த வாக்குக்கணிப்பில், இலங்கை அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் என்று 15.23 வீதமான மக்களும், இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமாட்டாது என்று 84.67 வீதமான மக்களும் வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## சுனாமியால் பாதிப்புற்ற பிரதேசங்களில்

# நிவாரணம், மீள்கட்டுமான பணிகளை துரிதமாக முன்னெடுத்துச் செல்லவேண்டும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மிக துரிதமாக முன்னெடுக்குமாறு சகல அரசாங்க அதிபர்களுக்கும் அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை நேற்றுமுன்தினம் கொழும்பிற்கு அழைத்து விசேட கூட்டம் ஒன்றை அரசாங்கம் நடத்தியபோதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயற் குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான மனோதித்தவெல தலைமையில் ஆய்வு நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் காலை ஆரம்பித்த இந்தக்கூட்டம் மாலை 4.00 மணிவரை இடம்பெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் துரிதமாக இந்தப் பணிகளைத் தொடருமாறு சகல அரசாங்க அதிபர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்டுகின்றது. (க-9)

# 2-வது தற்காலிக மீள்குடியேற்றத்திட்டம் ஆலையடி வேம்பில் திறந்துவைப்பு

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கவடாப்பிட்டியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டி முடிக்கப்பட்ட இரண்டாவது தற்காலிக மீள்குடியேற்றத்திட்ட திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் கோர





அலைகளில் உறவுகளைத் தொலைத்துவிட்டு வீடு வாசல், உடமைகளை இழந்து, நிர்க்கதியாய் நிற்கின்ற மக்களின் எதிர்கால நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முகமாகவும், அவர்களுக்கான பொருத்தமான இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்கும் முகமாகவும் அம்பாறை மாவட்டத்தில் எட்டு இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிக மீள்குடியேற்றக் கிராமங்களை அமைத்து வருகின்றது.

அந்தவகையில் கவடாப்பிட்டியில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தினை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் பொ.ஆதவன் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில், திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர், ஆலையவேம்பு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், கிராம சேவகர்கள், கண்ணகிபுரம் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி; மதகுருமார், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ இல்ல கன்னியாஸ்திரிகள் மற்றும் பொதுமக்கள எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து அக வணக்கம் நடைபெற்றது. தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக பெயர்ப்பலகையை கண்ணகிபுரம் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி திரைநீக்கம் செய்துவைத்தார். குடியிருப்பின் முதலாவது வீட்டை திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் சு.கரன் திறந்து வைக்க இரண்டாவது வீட்டை அக்கரைப்பற்று கிறிஸ்தவ பங்குத்தந்தை திறந்து வைத்தார்.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் பொ.ஆதவன் உரையாற்றுகையில்,

நாங்கள் இதுபோன்ற எட்டு இடங்களில் வீடுகளை அமைத்து வருகின்றோம் என்றும், மிக விரைவில் அவற்றையும் மக்களுக்குக் கையளிப்போம். மக்களின் எதிர்பார்ப்புக்கள் பலவாக இருந்தபோதும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்களின் எதிர்பார்பபுக்களை முன்னுரிமைப்படுத்தி அதற்கேற்ப சேவைகளைச் செய்துவருகின்றது. அந்த வகையில் மக்களின் எதிர்கால வாழ்வில் ஒளியூட்டுவதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உங்களுடனேயே நிற்கும் எனத் தெரிவித்தார். (ற)

# கரணவாயில் குடும்பஸ்தர் கொலை; சந்தேகநபர்கள் இருவர் கைது

(துன்னாலை)

கரணவாய் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை கொலைசெய்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி க.அரியநர்யகம் உத்தரவிட்டார்.

இதேவேளை, கொலையுண்ட பிரஸ்தாப குடும்பஸ்தரின மகளுடன் குறிப்பிட்ட நபர்கள் சேஷ்டை புரிந்ததாகவும் அவ்வேளையில் பிரஸ்தாபநபர் சம்பந்தப்பட்ட நபர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததாகவும் இதன்பின்னரே இவர் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (க-101)

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் - குறள்

வலம்புரி

# எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்

சுனாமிப் பேரழிவால் ஏற்பட்ட இழப்புக்கள், அதன் காரணமாக கிடைக்கப்பெற்ற நிவாரணப் பொருட்கள், அவற்றைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்தளிப்பதில் நிலவும் சிக்கல்கள் என இலங்கையின் சுமுகமற்ற அரசியல் நிர்வாக நிலைமை புலப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் இலங்கை 20 வருடங்களாக யுத்த சூழ்நிலைக்குள் மூழ்கியிருந்தமையேயாகும்.

இன யுத்தம் நிறுத்தப்பட்டு பல்லின மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான களநிலைமை ஏற்பட்டிருக்குமாக இருந்தால் நாட்டில் ஏற்படக்கூடிய எந்தச் சவாலையும் சமாளிக்கும் அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு விருத்திபெற்றிருக்கும்.

எனினும் அத்தகையதோர் சூழ்நிலையை ஏற்படுத்துவதில் சிங்கள அரசுகள் அக்கறைகொள்ளவில்லை. மாறாக, தமிழினத்திற்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு அந்த இனத்தை அழித்தொழிப்பதிலேயே இலக்காக இருந்தன.

குறிப்பாக காலத்துக்காலம் ஆட்சிபீடங்களை மாறிமாறிக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் இளைஞர்களை இலக்குவைத்து வேட்டையாடினர். அதன் விளைவாக ஏற்பட்டதே விடுதலைப் போராட்டமாகும். இவை தெரிந்த விடயங்கள்.

தெரிந்தவற்றில் இருந்து வரலாற்றின் பாதையைப் படித்துக்கொள்வதே நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லும் ஒரேவழியாகும். ஆனால் இதனை செயலாற்றுவதில் அரசுகள் தவறிவிட்டன.

இலங்கையொரு பௌத்த சிங்கள நாடென்ற பிரகடனத்தோடு பிரச்சினைகள் அணுகப்பட்டதன் காரணமாகவே நிலைமை முற்றி முறுகிப்போயுள்ளது.

இந்த உண்மையை உலகம் முழுவதும் உணர்ந்துகொண்டாலும் இலங்கையின் முக்கியமான அரசியல் தலைமைகள் உணர்ந்துகொள்ளவில்லை என்பதே விசித்திரமான செய்தியாகும்.

உண்மையில் இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு ஆரம்பத்திலேயே தீர்வுகாண முற்பட்டிருந்தால் அது இலகுவானதாகவும், சுமுகமானதாகவும் முடிந்திருக்கும்.

ஆனால் பிரச்சினை ஒன்றாகவும், அதற்கான தீர்வு அணுகுமுறை வேறொன்றாகவும் இருந்ததன் காரணமாக இன்று இனப்பிரச்சினை என்பது தீர்க்க முடியாத நோயாக மாறிவிட்டது. இது யதார்த்தமான நிலைமை எனினும் இதனை உணர்ந்துகொள்வதில் இன்னமும் கடினநிலை தென்னிலங்கை அரசியல் தலைமைகளிடம் இருப்பது வேதனைக்குரியதாகும்.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமையை தீர்ப்பது யாராலுமே முடியாதென்பது அனுபவாயிலாக் கண்ட உண்மை.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தென்னிலங்கை அரசியல் தலைமைகளிடம் ஓர் நேர்முகமான மனமாற்றம் ஏற்படவேண்டும். அத்தகையதொரு மாற்றம் ஏற்படாதவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு, சமாதானப் பேச்சு என்பவை சாத்தியமற்றவையே.

இதனை நோர்வேயின் சமாதான அனுசரணையிலிருந்து உணர்ந்துகொள்ளமுடியும். இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அமைவாக மூன்றாந்தரப்பு அனுசரணையாளராகச் செயற்பட நோர்வே அரசு முன்வந்திருந்தது - இதனை அரசும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறு இருதரப்பின் அனுமதியோடு சமாதானப் பேச்சுகளின் அனுசரணையாளராக செயற்பட்ட நோர்வே தனது முயற்சியில் வெற்றியீட்டமுடியாமல் இருப்பதற்கான காரணம்தான் என்னவென்றால்,

அது இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்ற அழுத்தத்தை எதிர்க்கட்சிகள் அரசுக்கு வழங்காமையேயாகும். இதனை விசுவாசமாக எதிர்க்கட்சிகள் செய்யுமாயின் சமாதானப் பேச்சுகள் மீண்டும் சாத்தியமாவது உறுதி.

## போர் மூண்டால் அரசே பொறுப்பு;

# சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்குமாறு மேற்குலக நாடுகள் அரசுக்கு அழுத்தம்

அரசாங்கத்திற்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகரித்துவரும் இந்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கக் கோரி அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இதனால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் கடும் அரசியல் நெருககடிக்குள் சிக்கியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்குலக நாடுகளின் கடும் அழுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் ஆட்சியிலிருந்து விலகப் போவதாக ஜே.வி.பி.யின் தலைமை பகிரங்க எச்சரிக்கை விடுத்திருப்பதையடுத்தே இந்த அரசியல் நெருக்கடிக்குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிக்கியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காது விட்டால், அது போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறிவடையச் செய்து மீண்டும் போர் ஏற்படுவதற்கு வழிவகுத்துவிடுமென்றும் அவ்வாறு போர் மூண்டால அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென்றும் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

கொழும்பிலுள்ள மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் மூலமாகவே இந்த எச்சரிக்கையுடன் கூடிய அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், நோர்வே, கனடா, இத்தாலி போன்ற நாடுகளே தற்போது இலங்கை விவகாரத்தில் கூடிய கவனமெடுத்து வருவதாகவும் அதன் ஒரு கட்டமாகவே இலங்கை அரசாங்கத்திற்கு இந்த அழுத்தம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில், கடும் அரசியல் நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தையும், தனது நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்தி நிலைமையை சமாளிக்க முயற்சிக்கக் கூடுமென அரசியல் ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ற)

# சுனாமி அனர்த்த நிவாரணக் கட்டமைப்பில் புலிகளையும் இணைக்க கடும் பிரயத்தனம்

## எடுப்பதாகக் கூறுகிறார் எரிக்

(அம்பாறை)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்துக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்ட அவர் நேற்று முன்தினம் காலை சாய்ந்தமருது அலிஹெலால் வித்தியாலயத்தில் இடம்பெற்ற அந்த மாவடடத்தைச்சேர்ந்த மதப் பெரியார்களுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சுனாமி புனரமைப்புக்கான ஒருகடடமைப்பை உருவாக்க தீவிர முயற்சி எடுககப்படும். இந்தப் பொதுக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானது. குறிப்பாக வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு இந்தக் கட்டமைப்பின் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.-

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளும் இந்தக்கட்டமைப்பினூடாக உறுதிப்படுத்தப்படும் எனவும் உறுதியளித்தார். இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களுக்கான பங்களிப்புத் தொடர்பாக விடுக்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தான் தீர்மானிக்க வேண்டும். அது எமது பொறுப்பல்ல. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொள்வது எமக்கு விருப்பமாகத்தான் உள்ளது. நாங்கள் சமாதான ஏற்பாட்டாளர்களே தவிர, சமாதானத்திற்கான முக்கிய கர்த்தாக்கள் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் எரிக்சொல்ஹெய்ம் பாண்டிருப்பில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பிறையனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்கு எரிக்சொல்ஹெய்ம் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் விடுதலைப்புலிகளும் அரசும் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதில் நோர்வே அரசு தற்போது தீவிர அக்கறை காட்டியே வருகின்றது. இதன் கட்டங்களாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இச் சந்திப்பின்போது மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பிறையன் கருத்துத் தெரிவிக்கையில்,



எமது மக்களுக்கான பல்வேறு புனரமைப்பு, புனர்நிர்மாண நடவடிக்கைகளை எமது போராளிகள் மேற்கொண்டிருந்த போதிலும் நாம் சற்றுக் கவலையுடன் இருக்கின்றோம்.

அதாவது ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களில் படையினரை நிறுத்தி வைபபதனால் எமது வீரர்களுக்கு மட்டுமன்றி இந்த மக்களுக்கு உதவி செய்ய வரும் வெளிப் பொது அமைப்புக்களுக்கும் பல இடையூறுகள் ஏற்படுகின்றன எனச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த மூன்று வருடகாலமாக அமுலில் இருந்துவரும் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தில் உயிராகவும் இரத்தமாகவும் நாம் தான சமாதானத்திற்கு விலை கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது மக்கள் நாம் ஏன் மௌனமாக இருக்கின்றோம் எனக் கேட்பதுடன் விறைப்பான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்தி வருகின்றனர்.

ஆனால் சமாதானத்தின் மேல் உள்ள நம்பிக்கையை, அக்கறையை நாம் இன்னும் தளரவிடவில்லை எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

(ற-4)

# நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை

(மட்டக்களப்பு)

கடற்பேரலை அனர்த்தம் இலங்கையை தாக்கி இரண்டு மாதங்கள் நிறைவு பெறுகின்ற போதும் சில பகுதிகளுக்கு அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் கிடைக்காதுள்ளதாகத தெரிவிக்கப்படுகின்றது.

காலி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தின் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட மக்களில் 80 வீதத்தினருக்கு உணவு முத்திரைகளும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நிவாரணங்கள் கிடைக்கப் பெறாதோருக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

(க-9)

# இந்திய அரசின் நிதியுதவியுடன் வைத்தியசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளை புனர் நிர்மாணம் செய்வதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கும் இந்திய அரசாங்கம் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது.

புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்வதற்காக இந்தியாவின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சைச் சேர்நத 5 பேர் கொண்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்திருக்கின்றனர்.(க-9)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன்தோள் மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

# அனர்த்த வேளைகளில் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டில் ஏதேனும் அனர்த்தம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அனைத்துத்தரப்பினரும் பேதங்களை மறந்து இணைந்து செயற்பட வேண்டும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சகல தரப்பினரும் இணைந்து செயற்படுவதன் மூலம் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும்.

இதற்கு தேரர்கள் தலைமையிலான சமயத்தலைவர்களின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் கிடைத்துவருவது விரும்பத்தக்கது.

மல்வத்த மகாவிகாரையில் புதிய உப மகாநாயக்கராக நியமிக்கப்பட்ட விஜிய சிறிதேரரை வரவேற்கும் முகமாக வேகாகமவிகாரையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இந்தக்கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்.

கிராமங்களுக்கும் விகாரைகளுக்கும் இடையே இருக்கின்ற உறவை மேலும் வலுப்படுத்தவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (த-9)

# நாட்டுப்பற்றாளர் ஏரம்புவின் வித்துடல் நேற்று தீயுடன் சங்கமமானது

(கிளிநொச்சி)

நாட்டுப்பற்றாளர் கந்தையா ஏரம்பு மாஸ்டர் அவர்களின் புகழுடல் நேற்று பூரண மரியாதைகளுடன் தீயுடன் சங்கமமானது.

அவரின் இறுதி வணக்க நிகழ்வு நேற்று முற்பகல் கிளிநொச்சியில் தூயவன் அரசறிவியல்கல்லூரி மண்டபத்தில் தமிழீழ கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருண்மாஸ்ரர் தலைமையில் நடைபெற்றது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தளபதி கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் விதுசா, கேணல் துர்க்கா ஆகியோர் கலந்துகொண்டு ஏரம்புமாஸ்ர ரின் புகழுடலுக்கு மலர்மாலைகளை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் எனப்பெருமளவானோர் கலந்துகொண்டனர் இறுதி வணக்க உரைகளை விடுதலைப்புலிகளின் மூத்தஉறுப்பினர் க.வே.பாலகு மாரன், செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை பேச்சாளர் பா.கனகலிங்கம் தமிழீழ கல்வி மேம் பாட்டுப்பேரவைத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் ஜோசப்அடிகள், கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளர் பா.அரியரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து புகழுடலுக்கு மலர் வணக்கம் இடம்பெற்றது.

அதன்பின் நாட்டுப்பற்றாளர் ஏரம்பு மாஸ்டரின் புகழுடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி திருநகர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (ச-4)

# இடைக்கால நிர்வாக...

கூட்டமைப்பு அரசுக்கு வழங்கிய ஆணை வேறு என எவரேனும் கூறினால் அது அரசியல் தெரியாத குழந்தைத்தனமான கருத்தாகவே இருக்கும்.

1999இல் மக்கள் ஆணைகிடைத்திருந்தால் புலிகளுக்குத் தேவையான வகையில் இடைக்கால நிர்வாகசபையை வழங்கியிருக்கலாம். எம்மை இணைத்துக்கொள்ளத்தேவையில்லை. ஆனால் இந்தநாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு ஒரு ஆணையையும் ஜே.வி.பிக்கு வேறொரு ஆணையையும் வழங்கவில்லை,

ஐக்கியமக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் இருந்து விலகுமாறு ஜே.வி.பியை நிர்ப்பந்திப்பதற்கு எந்தவொரு தரப்பினருக்கும் உரிமையில்லை ஒப்பந்தத்தில் உள்ள கொள்கைகளை உடைத்தெரியும் தரப்பினர்களை கூட்டமைப்பில் இருந்து விலக வேண்டும்.

நாம் கூட்டமைப்பு பற்றிப் பேசுவோம். முன்பு நான்பேசும் போது இரண்டு பக்கங்களில் இருந்தும் இரண்டு ஒலிவாங்கிகள் இருந்தன. ஒன்று ரூபவாகினி, மற்றையது ஐ.ரி.என் இது ஒன்று தான் தற்போது இருக்கிறது என்றும் அவர்கூறினார். (த-8)

# ஜே.வி.பி-ஸ்ரீ.சு.க...

கொழும்பு ஆங்கில் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சுனாமி நிவாரணப் பணிக்கான 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியில் 60 வீதம் வட-கிழக்கிற்கு தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

வட-கிழக்கு நிவாரணப் பங்கீட்டிற்கு நோர்வே உதவி வருகிறது அரசின் சகல குழுக்களும் ஊழல் புரிந்தன. இதனால் தாம் அவர்களுடன் இணைந்து செயற்படுவதில் அர்த்தமில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ள நிலையில் ஜே.வி.பியினர் இதனைத் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை புலிகள்இப்பங்கீட்டில் ஈடுபடுவதை நாம் விரும்பவில்லை. அரசாங்கமே தனியாக இதனைமேற்கொள்ள வேண்டும் என ஜே.வி.பிதெரிவித்துள்ளநிலையில், அரசுடன் இணைந்து செயற்பட புலிகள் விரும்பவில்லை. அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாதுள்ளது.

புலிகளை அழைத்ததன் மூலம்அரசு தன்கடமையை சரிவரச்செய்துள்ளது என அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித்துள்ளார். (த-6)

# இளவரசர் சாள்ஸ் இ... இலங்கை வருகிறார்

## ஜனாதிபதியுடனான சந்திப்பு ரத்து

(கொழும்பு)

இங்கிலாந்து முடிக்குரிய இளவரசர் சாள்ஸ், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்திக்க மாட்டார் என தெரிவிக்கப்படுகிறது. சாள்ஸ் ஜனாதிபதியுடன் பேச்சுககளைநடாத்துவதாக ஏற்பாடாகி இருந்தது இறுதி நேரத்தில் அது கைவிடப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 6மணிக்கு இலங்கைவரும் அவர் நண்பகல் 11.45 மணிக்கு புறப்பட்டுச்செல்வதற்கு ஏற்பாடாகி உள்ளது. இதுபற்றி தகவல் திணைக்கள அதிகாரிகள் கடந்தவாரம் அறிவித்ததன்படி சாள்ஸின் அட்டவணை இன்னமும் உறுதிப்படாது உள்ளபோதிலும் ஜனாதிபதி தனது சந்திப்பை விலக்கியுள்ளார் ... யாகியுள்ளது.

தமிழ் பிரதேசங்களை பார்... சாள்ஸ் விடுத்தஅழைப்பை நிராகரித்துள்ளதால் கடந்த... குள் பல சர்ச்சைகள் நில... இவ் மறுப்பிற்குப் பிறகும் சு... களை பார்வையிட சாள்ஸ் ... பிற்குச் செல்லவுள்ளார் என... படுகிறது. அரசின் நிராகரிப்பை... மட்டக்களப்பு செல்வதாலேயே... அவருடனான சந்திப்பை நிறுத்... தெரிவிக்கப்படுகிறது.

# 76 படகுகள் இன்று கையளிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி தும்பளை படகுகட்டும் தொழிலகத்தால் கட்டப்பட 76 மீன்பிடிப்படகுகள் இன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

கியூமெடிக்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு டொன் பொஸ்கோ தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

இதில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சம்மேளனப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (த-43)

# கரவெட்டி...

கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணம்செய்தபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.(ச)

# இ.தொ.காவுடன்...

நடைபெறவிருந்த சந்திப்பை ஜனாதிபதி ரத்துச்செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இ.தொ.காவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எவையும் ஜனாதிபதியால் பூர்த்திசெய்யப்படவில்லை. பலதடவைகள் நேரிலும் கடிதங்கள் மூலமும் எமது கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியபோதிலும் அவர் அக்கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து நடைமுறைப்படுத்தவில்லை என இ.தொ.கா. தெரிவித்துள்ளது.

இன்றைய சந்திப்பில் தமது கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி உடன்படாவிட்டால் எதிர்க்கட்சியுடன் இணைவது குறித்து தமது கட்சி முடிவெடுக்குமென அக்கட்சி தெரிவித்துள்ளது. (ச)

# மாணவிகளுக்கு...

பாடசாலை மாணவர்களும் ... கூடிநின்று குழுக்களாகச் செய... வதுடன், தங்களுக்குள் மோத... தையும் அநாவசியமான செயல... பட்டு அமைதிக்கும், இயல்பு ... கும் பங்கம் விளைவிப்பதனால்... திற்கு இடமானவர்களை ... விசாரணை செய்வதுடன், நீதி... ஆஜர்செய்யவேண்டும் எனவும்... மாவட்ட நீதிபதி பொலிசாருக்... துள்ளார்.

மாணவிகள் பாடசாலைக்கு... போதும், வீடுதிரும்பும்போதும் ம... யார் கல்வி நிலையங்களுக்குச்... திரும்பும்போதும் இளைஞர்கள் ... குழுக்களாகக் கூடிநின்று ... கொடுத்துவருவதாகப் பொலிஸாரி... திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது...

# மோட்டார்....

வைத்தியசாலைக்கு கொண்டுவ... வழியில் அவர் மரணமானார்.

இவ்விபத்தில் இடைக்காடு அச்... யைச் சொந்த இடமாகக்கொண்ட... பிட்டியில் வசித்துவருகின்ற இ... சோமசுந்தரம் (வயது 76) என்பவரே... மானவராவார். இந்த விபத்துத் தொ... வல்வெட்டித்துறைப் பொலிஸார் ... இடத்திற்குச் சென்று விசாரணை... மேற்கொண்டனர்.


மனோகரா ...

இளையதளபதி விஜய்,

ரவி கிருஷ்ணா, நதிஷா, ர...




நாதன்ஸ் சினிமா

குளிரூட்டியது

யாழ்ப்பாணம் [ஆஸ்பத்திரிக்கு முன்பாக]

28.02.2005 முதல்

விக்ரம், திரிஷா, விவேக், விஜயகுமார் நடித்த

சாமி

தினசரி 10.30, 2.30 6.30, 9.30 பு.நே.

எமது அடுத்த வெளியீடு

தாவடி மைந்தன் நடிக்கும் குருதேவா

நிறைஞ்சனா... சங்கானை

சரத்குமார். சாக்ஷி... வடிவேலு நடித்த

காட்சிகள் 11.00, 2.45, 6.00 பு...

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டியது

யாழ்ப்பாணம் [ஆஸ்பத்திரிக்கு முன்பாக]

பரத் - சந்தியா மற்றும் பலர் நடித்...

காதல்



இன்றுமட்டும்

தினசரி (பு.நே) 10.30 2.30, 6.30, 9.30

அடுத்த வெளியீடு

ஜெயாகால், பிரமதி, நாசர், விஜயகுமார், இளவரசி நடி...

குருதேவா

YOGI BEAUTY PARLOUR And HOME SCIENCE ACADEMY

*Academy of Beauty Culture, Hair Dressing & Home Economics*

குறுகிய கால புதியபயிற்சி வகுப்புக்கள் 05-03-2005 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

1. கேக் ஐசிங் அலங்காரம், மேலைத்தேய ஐசிங் அலங்காரம், மாச்சீனி மலர் அலங்காரம் (Fondant Structures & Sugar Flowers)
2. முக ஒப்பனை, தலை அலங்காரங்கள், மணப்பெண் அலங்காரங்கள்
3. அழகுக் கலையும், மூலிகை சிகிச்சை முறைகளும் (Facial Classes) (Beauty Culture and Herbal Therapies)

இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P. 222 2796
0777164923.

(9280)

75, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்,
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...